# வருடாந்த அறிக்ஸ்கை 2011

தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனம்
களணி பல்கலைக்கழகம்,
407 பௌத்த்தாலோக மாவத்ந்தை, கொழும்ப்பு - 07

1. தூரநோக்க அறிக்கை:

தெற்காசியாவில் தொல்லியலும் அதன் தொடர்பான விடயங்கள் சம்பந்தமான உயர்கல்வியிலும், ஆய்விலும் சிறந்ததொரு நிலையமாகவிருத்தல்

1. பணி வாசகம்:

நிபுணர்கள் மற்றும் ஆர்வமுள்ள பொது மக்களுக்கு கல்விசார், அறிவுசார், பொருளாதார மற்றும் சமூக நலன்களை அளிக்கும் விதத்தில் தொல்பொருளியல் மற்றும் தொடர்பான துறைகளில் அறிவினை உருவாக்குதல், பிரயோகித்தல் மற்றும் தொடர்பாடலை மேற்கொள்ளுதல் தொல்பொருளியல் பட்டமேற்படிப்பு நிறுவனத்தின் பணியாகும்.

3. பணிப்பாளரின் மதிப்புரை:

**a. சுருக்கத் தகவல்:**

களனி பல்கலைக்கழகத்தின் தொல்லியல் பட்டபின்படிப்பு நிறுவகம் (PGIAR) தொல்லியலிலும் அதன் தொடர்பான விடயங்களிலும் ஆர்வமுள்ள நிபுணர்களுக்கும் பொதுமக்களுக்கும் அவைகள் தொடர்பான பயிற்சிகள், கற்கைகள், ஆய்விற்கான சூழல் ஆகியவற்றினை ஏற்படுத்துவதன் ஊடாக அத்தகைய கல்வியினை மேம்படுத்தல், பரப்புதல், பாதுகாத்தல் போன்ற அதன் சட்ட நோக்கினை நிறைவேற்றுகின்றது. அத்தகைய கல்வி ஒரு சமூகத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்திற்கும், துரித கலாச்சார உலகமயமாக்கல் காலத்தில் நலமான தேசிய அடையாளத்திற்கான தகவல்களிலும் வரலாற்றின் அறிவு, கலாச்சாரம், மரபுரிமை, கலை, ஆதிகால புறச் சூழல், ஆதிகால தொழில் நுட்பங்கள், பாரம்பரிய அறிவு முறைமைகள் ஆகியவற்றிலும் முக்கியமான பங்கினை வகிக்கின்றது என PGIAR நம்புகின்றது.

**b. சாதனைகள்:**
தொல்லியலிலும் அதன் தொடர்பான விடயங்களிலும் அறிவினையும் தொழில் விற்பன தரங்களையும் மேம்படுத்த அர்த்தபுஸ்டியுடன் பங்களிக்கக்கூடிய உயர் தர ஆய்வில் ஈடுபடக்கூடிய வல்லமையுள்ள நிபுணர்களைப் பயிற்றுவித்தலும், அத்தகைய அறிவில் ஆர்வமுள்ள பொதுமக்களுக்கு அதனை அடையக் கூடியதாகவுமாக்குதல்

**c. தோல்வியும், நியாயப்படுத்தலும்:**

**d.** எதிர்காலத் திட்டம்

**4. மூலவலங்களினதும், மாணவர்களினதும் விபரங்கள்:**

| நிறுவகம் | பாடநெறி | மொத்த மாணவர்கள் | மொத்த கல்விசார் பணியாளர் | மொத்த கல்விசார்பற்ற பணியாளர் |
|---|---|---|---|---|
| PGIAR | PGD- தொல்லியல | 49 | 10 | 25 |
| | PD- அருன்பொருட காட்சியியல் | 09 | - | - |
| | MSc | 45 | - | - |
| | MA ஆய்வு | 06 | | |
| | M.Phil | 01 | - | - |
| | PhD | 03 | - | - |
| மொத்தம் | | 113 | 10 | 25 |

5. உள்நாட்டு மாணவர்களின் விபரம்:

| நிறுவகம் | பாடநெறி | மொழி | 2011 ல் உள்வாங்கல் | 1ம் வருட மாணவர்கள் | 2 வருட மாணவர்கள | 3 வருட மாணவர்கள் | 4 வருட மாணவர்கள | பட்டம் பெற்றோர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| PGIAR | PGD- தொல்லியல | சிங்களம்/ ஆங்கிலம் | 49 | - | - | - | - | 22 |
| | PGD- அருன்பொருட் காட்சியியல் | | 09 | - | - | - | - | 11 |
| | MSc | | 45 | - | - | - | - | 02 |
| | MA (R) | | 06 | - | - | - | - | 05 |
| | M. Phil | | 01 | - | - | - | - | 01 |
| | PhD | | 03 | - | - | - | - | - |
| | PGD மரபுரிமை | | | - | - | - | - | 04 |

6 . கல்விசார் பணியாளர் விபரம்

| நிறுவகம் | பாடம் | மொழி | சிரேஸ் பேரா. | பேராச ிரியர் | சிரே. விரிவு. | விரிவுரையாளர் | உதவி விரிவு. | பயிற்சியளிப்பவர்s | உதவி நூலகர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| PGIAR | தொல்லியல் | சிங்களமும் ஆங்கிலமும் | - | 03 | 05 | 01 | - | - | 01 |
| மொத்தம் | | - | - | 03 | 05 | 01 | - | - | 01 |

7. மொத்த கல்விசார்பற்ற பணியாளர் விபரங்கள்:

| நிறுவகம் | ஆதி சிரேஸ்டம் | சிரேஸ்ட பணியாளர் | கனிஸ்ட பணியாளர் | சிற்றூளியர் | கல்விசார் உதவி பணியாளர் | எழுதுவினைஞர்/ தொழில் நுட்பவி/ ஏனையோர் |
|---|---|---|---|---|---|---|
| PGIAR | - | 03 | 02 | 04 | 02 | 14 |
| மொத்தம் | - | 03 | 02 | 04 | 02 | 14 |

8. ஆய்வு, புதுமையாக்கம், பிரசுரங்கள் விபரம்:

| விடயம் | பிரசுரிக்கப்பட்டவை | வுணிகமாக்கப்பட்டவை | சமர்ப்பிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| a. ஆய்வுகளின் எண்ணிக்கை | 05 | | 05 |
| b. புதுமையாக்கங்களின் எண்ணிக்கை | Nil | Nil | Nil |
| c. சஞ்சிகைகளின் எண்ணிக்கை | 01 | | 01 |
| d. புத்தகங்களின் எண்ணிக்கை | 03 | | 02 |
| e. கட்டுரைகளின் எண்ணிக்கை | 10 | | |
| f. ஏனையவை | | | |
| மொத்தம் | 19 | | 08 |

9. நிசழ்ச்சித்திட்டங்கள், ஒன்றுகூடல், செயலமர்வுகள் ஆகியவற்றின் விபரங்கள்:

| விடயம் | சமூகமளித்தவை | பூர்த்தியானவை | சமர்ப்பிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| a. பட்டப்பின்படிப்பு பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் தொகை | 03 | 02 | 02 |
| b. பட்டப்பின்படிப்பு டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டங்களின் தொகை | 01 | 01 | 01 |
| c.பட்டமாணி நிகழ்ச்சித்திட்டங்களின் தொகை | 02 | 02 | 02 |
| d.டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டங்களின் தொகை | | | |
| e. சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டங்களின் தொகை | | 01 | |
| f. ஏனையவை | 02 | | |
| மொத்தம் | 08 | 06 | 05 |

10.புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகளின் விபரங்கள்d:

| பீடம் | பாடநெறி | மொழி | சான்றிதழ் | டிப்ளோமா | PG டிப்ளோமா | முதுமாணி | M Phil | PhD |
|---|---|---|---|---|---|---|---|---|
| PGIAR | தொல்லியலில் அடிப்படைப் பாடநெறி | சிங்களம் | 65 | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| மொத்தம் | | | 65 | | | | | |

11. மீள்இடம் பெறும் செலவுகளின் விபரங்கள்:

'000

| விடயம் | 2010 ரூபா. | 2011 ரூபா. |
|---|---|---|
| a. தனிப்பட்டோர் ஊதியங்கள் | 19,353 | 26,543 |
| b. பிரயாணம் | 69 | 248 |
| c. வினியோகங்கள் | 1,244 | 1,466 |
| d. பராமரிப்பு | 767 | 732 |
| e. ஒப்பந்த சேவைகள் | 5,252 | 5,473 |
| f. ஏனையவைகள் | 6,727 | 5,901 |
| தேய்மானமற்ற மொத்தத் தொகை | 33,412 | 40,363 |

12. **மூலதனச் செலவின் விபரங்கள்:**

'000

| விடயம் | 2010 ரூபா | 2011 ரூபா |
|---|---|---|
| a. தளபாடங்கள், காரியாலய உபகரணங்கள் பொற்றுக்கொள்ளல் | 1,246 | 5,484 |
| b. இயந்திரதாதிகள் பெற்றுக்கொள்ளல் | - | - |
| c. கட்டடங்களையும், கட்டமைப்புக்களையும் பெற்றுக்கொள்ளல் | 1,360 | 319 |
| d. ஏனையவை(நூலகப் புத்தகங்கள்) | 545 | 584 |
| | | |
| மொத்தம் | 3,151 | 6,387 |

13. **நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள்(உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடப்பட்டவை):**

| பெயரும் விபரங்களும் | கடன்/மானியம | நிதியிடும் முகவர் | TCE ரூபா. | RFA ரூபா. | DFரூபா.. |
|---|---|---|---|---|---|
| C.AC.S.ஆதிவாசிகளின் கலாச்சாரத்ததை பாதுகாத்தல் | மானியம | பன்பாட்டு அலுவல்கள் அமைச்சு | 2,347 | | |
| அருன்பொருட் காட்சியியல் பொருட்காட்சி | மானியம | துறைமுக அதிகார சபை | 507 | | |
| யுாப்பஹுுவா நிகழ்ச்சித் திட்டம் | மானியம் | மத்திய கலாச்சார நிதி | 1,082 | | |
| பின்னாவல நிகழ்ச்சித்திட்டம் | மானியம் | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 1,000 | | |
| ரன்சமடம நிகழ்ச்சித்திட்டம் | மானியம் | தொல்லியல் திணைக்களம் | 500 | | |
| நில்கிறிசியா நிகழ்ச்சித்திட்டம் | மானியம் | தொல்லியல் திணைக்களம் | 500 | | |
| நிக்கவெல்முள்ள நிகழ்ச்சித்திட்டம் | மானியம் | தொல்லியல் திணைக்களம் | 400 | | |
| பலியோ உயிரியல் நிகழ்ச்சித்திட்டம் | மானியம் | சுற்றாடல் அமைச்சு | 600 | | |
| அலவல நிகழ்ச்சித்திட்டம் | மானியம் | சுற்றாடல் அமைச்சு | 865 | | |
| மொத்தம் | | | 7,801 | | |

14. நிகழ்ச்சித்திட்ட செலவீனங்களின் விபரங்கள் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடப்பட்டவை):

'000

| பெயர் | TCE ரூபா. | 2010 ல் செலவு | 2011 ல் செலவு | 31.12.2011ல் திரட்டடிய செலவு | % பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| C.AC.S.ஆதிவாசிகளின் கலாச்சாரத்ததை பாதுகாத்தல் | 2347 | 1236 | 1005 | 2241 | 95 |
| அருன்பொருட் காட்சியியல் பொருட்காட்சி | 507 | 124 | 383 | 507 | 100 |
| யுாப்பஹுவா நிகழ்ச்சித் திட்டம் | 1082 | - | 1082 | 1082 | 100 |
| பின்னாவல நிகழ்ச்சித்திட்டம் | 1000 | - | 738 | 738 | 74 |
| ரன்சமடம நிகழ்ச்சித்திட்டம் | 500 | - | 485 | 485 | 97 |
| நில்கிறிசியா நிகழ்ச்சித்திட்டம் | 500 | - | 429 | 429 | 86 |
| நிக்கவெல்முள்ள நிகழ்ச்சித்திட்டம் | 400 | - | 01 | 01 | 0.25 |
| பலியோ உயிரியல் நிகழ்ச்சித்திட்டம் | 600 | - | 100 | 100 | 17 |
| அலவல நிகழ்ச்சித்திட்டம் | 865 | - | - | - | 0 |

15 . நிதி முன்னேற் விபரங்கள் (செலவு):

'000

| விடயம் | 2011 ல் ஏற்பாடுகள் ரூபா. | 2011 ல் செலவு | சேமிப்புக்கள்/மேலதிகம் ரூபா. |
|---|---|---|---|
| a. நிகழ்ச்சிதிட்டத்தை தவிர மீள் இடம் பெறல் | 44,400 | 41,319 | 3,081 |
| b. நிகழ்ச்சித்திட்டத்தை தவிர மூலதனம் | 20,000 | 6,387 | 13,613 * |
| c. உள்நாட்டு நிதியிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் | 6,441 | 4,223 | 2,218 * |
| d. வெளிநாட்டு நிதியிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் | - | - | - |
| | | | |
| | | | |
| மொத்தம் | 70,841 | 51,929 | 18,912 |

*Continuing
2012

16. நிதி **முன்னேற் விபரங்கள் (உருவாக்கப்பட்ட வருமானம்):**

| வருமான மூலகம் | 2010 ல் ஏற்பாடுகள் ரூபா. | 2010ல் சேகரிக்கப்பட்டவை ரூபா. | பற்றாக்குறை/மேலதிகம் ரூபா. |
|---|---|---|---|
| a. பட்டப்படிப்புக் கற்கைகள் | | | |
| b.பின்பட்டப்படிப்பு கற்கைகள் | | | |
| c. ஆலோசனைகள் | | | |
| d. ஏனையவை | | | |
| | | | |
| மொத்தம் | | | |

17. நிதி செயற்திறன் பகுப்பாய்வு – 2011:

| விடயம் | சூத்திரம் | மாணவருக்கான செலவு ரூபா. |
|---|---|---|
| a. மாணவருக்கான மீள் இடம் பெறும் செலவு(RE) | RE/மாணவரின் தொகை | 339 |
| b. மூலதனச் செலவு(CE) | CE/ மாணவரின் தொகை | 54 |
| | | |
| மொத்தம் | | 393 |

தொல்பொருள் ஆய்வு பட்டப்பின் கற்கை நெறிக்கான நிறுவனம்
(களனி பல்கலைக்கழகம்)
2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று

| | குறிப்பு | 2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறு | | 2010 டிசம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நிலையான சொத்துக்கள்** | | | | | |
| நிலம்/கட்டடம்/உபகரணங்கள் | 1 | 407,696,651 | | 406,871,358 | |
| **முதலீடுகள்** | | | | | |
| நிலையான வைப்புகள் | | 1,302,838 | | 1,198,663 | |
| | | | 408,999,489 | | 408,070,021 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | | | |
| இருப்பு | 2 | 1,689,991 | | 1,585,372 | |
| விற்பனை/ ஏனைய வருமதிகள் | 3 | 494,335 | | 123,088 | |
| கடன்கள்/ சம்பள முற்பணம் | 4 | 6,643,700 | | 6,624,289 | |
| முற்பண மூலதனங்கள் | 5 | 1,355,554 | | 430,335 | |
| வழங்குநர் சேவை முற்பணம் | 6 | 776,352 | | 247,430 | |
| முற்பணக்கொடுப்பனவுகள் | | 76,274 | | 132,104 | |
| ஏனைய நடைமுறை சொத்துக்கள் | 7 | 5,299,077 | | 5,323,449 | |
| காசு மற்றும் அதற்குச்சமமானவை | 8 | 24,606,786 | | 14,205,420 | |
| | | | 40,942,069 | | 28,671,487 |
| **மொத்த சொத்துக்கள்** | | | 449,941,558 | | 436,741,508 |
| **பொறுப்புக்கள்** | | | | | |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | | | |
| நானாவித சென்மதியாளர் | 9 | 623,282 | | 237,507 | |
| வைப்புகள் | 10 | 108,781 | | 45,981 | |
| சென்மதி செலவுகள் | 11 | 2,364,139 | | 1,389,045 | |
| ஏனைய பொறுப்புக்கள் | 12 | 3,078,441 | | 4,639,358 | |
| | | | 6,174,643 | | 6,311,891 |
| **நீண்டகால பொறுப்புக்கள்** | | | | | |
| மூலதனம் செலவு செய்த மானியம் | 13 | 88,134,456 | | 87,487,604 | |
| செலவிடாத மானியம் | 14 | 17,311,267 | | 3,473,545 | |
| | | | 105,445,723 | | 90,961,149 |
| விசேட நிதியங்கள் | 15 | 353,177,157 | | 352,907,594 | |
| பரிசுகள்/அன்பளிப்புகள் | 16 | 3,501,656 | | 3,483,755 | |
| ஊழியர் ஈற்றுக் கொடுப்பனவு ஏற்பாடு | | 9,678,074 | | 7,155,959 | |
| | | | 366,356,887 | | 363,547,308 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | | 477,977,253 | | 460,820,348 |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | | | (28,035,695) | | (24,078,840) |
| **தேறிய சொத்துக்கள் /பெறுமதி** | | | | | |
| திரண்ட நிதி | | (28,035,695) | | (24,078,840) | |
| | | | (28,035,695) | | (24,078,840) |
| **மொத்த தேறிய சொத்துக்கள் / பெறுமதி** | | | (28,035,695) | | (24,078,840) |

பேராசிரியர் ஜகத் வீரசிங்க
பணிப்பாளர்

D.S.P. குமாரசிங்க
பிரதி தவிசாளர்

2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று

| | இந்த வருடம் 2011 | கடந்த வருடம் 2010 |
|---|---|---|
| **செயற்பாட்டு வருமானம்** | | |
| அன்றாட மானியங்கள் | 32,494,457 | 33,639,960 |
| கடன் வட்டிகள் | 265,874 | 261,547 |
| நானாவித வருமானங்கள் | 274,511 | 469,075 |
| பதிவுக் கட்டணங்கள் (பட்டப்பின் கற்கை நெறி) | 184,500 | 266,200 |
| வகுப்புக் கட்டணங்கள் (பட்டப்பின் கற்கை நெறி) | 2,926,100 | 1,376,000 |
| பரீட்சைக் கட்டணங்கள் (பட்டப்பின் கற்கை நெறி) | 105,500 | 139,000 |
| தீர்ந்த கணக்குகள் | 5,515,427 | 5,367,137 |
| வெளியீட்டு விற்பனைகள் | 54,175 | 80,774 |
| சொத்துகளிலிருந்து பெற்ற வாடகைகள் | 12,500 | 37,846 |
| | **41,833,044** | **41,637,539** |
| **செயற்பாட்டு செலவினங்கள் (தேய்வு உள்ளடங்கலாக)** | | |
| தனிப்பட்ட கொடுப்பனவுகள் | 26,543,253 | 19,352,546 |
| பிரயாணம் | 248,199 | 69,028 |
| பயன்படுத்திய நிரம்பல்கள்/ நுகரத்தக்கவை | 1,466,460 | 1,244,339 |
| பராமரிப்பு | 731,796 | 766,953 |
| ஒப்பந்த சேவைகள் | 5,472,679 | 5,251,554 |
| ஆய்வு அபிவிருத்தி | 471,750 | 34,200 |
| தேய்வு தீர்ந்தசெலவுகள் | 5,515,427 | 5,387,355 |
| ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் | 5,429,355 | 6,692,905 |
| செயற்பாட்டு செலவினங்கள் | 45,878,919 | 38,798,880 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளினின்றும் உருவான மிகை/(பற்றாக்குறை) | (4,045,875) | 2,838,659 |
| நிதிக் கிரயங்கள் | | 758,581 |
| நிலம்/கட்டடம்/உபகரணங்கள் விற்ற வருமானம் | | |
| மொத்த செயற்பாடு சாரா வருமானம் (செலவினங்கள்) | | |
| அசாதாரண உருப்படிகளுக்கு முன்னதான தேறிய மிகை/(பற்றாக்குறை) | | |
| அசாதாரண உருப்படிகள் | | |
| காலப்பகுதிக்கான தேறிய மிகை/(பற்றாக்குறை) | (4,045,875) | 3,597,240 |
| கடந்த வருடத்திலான மீதி கீழ்க்கொண்டு வந்தது | (23,989,816) | (27,676,080) |
| இவ் வருடத்துக்கான தேறிய மிகை/(பற்றாக்குறை) | (4,045,875) | 3,597,240 |
| **மீதி கீழ்க்கொண்டு சென்ற பொது ஒதுக்கங்கள்** | **(28,035,691)** | **(24,078,840)** |

**தொல்பொருள் ஆய்வு பட்டப்பின் கற்கை நெறிக்கான நிறுவனம்**
**2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான**
**தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய கூற்று**

| | மானியம் | ஒதுக்கங்கள் | மட்டுப்படுத்திய நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2006 டிசம்பர் 31 இலான மீதி | 51,541,072 | (23,534,574) | 7,473,130 | 35,479,628 |
| அரச/ஏனைய மானியங்களிலான அதிகரிப்பு | 21,300,000 | | | 22,085,285 |
| 2007 ஆம் ஆண்டுக்கான பற்றாக்குறை | | (196,208) | 785,285 | (196,208) |
| 2007 டிசம்பர் 31 இலான மீதி | 72,841,072 | (23,730,782) | 8,258,415 | 57,368,705 |
| அரச/ஏனைய மானியங்களிலான அதிகரிப்பு | 19,135,000 | | | 19,135,000 |
| 2008 ஆம் ஆண்டுக்கான பற்றாக்குறை | | (3,220,480) | 483,878 | (2,736,599) |
| 2008 டிசம்பர் 31 இலான மீதி | 91,976,072 | (26,951,262) | 8,742,293 | 73,767,106 |
| அரச/ஏனைய மானியங்களிலான அதிகரிப்பு | 1,900,000 | | | 1,900,000 |
| தீர்த்த கணக்குகள் | (5,347,786) | | | (5,347,786) |
| 2009 ஆம் ஆண்டுக்கான பற்றாக்குறை | | (724,818) | 353,303,621 | 352,578,803 |
| 2009 டிசம்பர் 31 இலான மீதி | 88,528,286 | (27,676,080) | 362,045,914 | 422,898,123 |
| அரச/ஏனைய மானியங்களிலான அதிகரிப்பு | 7,800,000 | | 1,501,394 | 9,301,394 |
| தீர்த்த கணக்குகள் | (5,367,137) | | | (5,367,137) |
| 2010 ஆம் ஆண்டுக்கான பற்றாக்குறை | | 3,597,240 | | 3,597,240 |
| 2010 டிசம்பர் 31 இலான மீதி | 90,961,149 | 24,078,840 | 363,547,308 | 430,429,620 |
| அரச/ஏனைய மானியங்களிலான அதிகரிப்பு | 20,000,000 | 89,024 | 2,809,578 | 22,898,602 |
| தீர்த்த கணக்குகள் | (5,515,427) | | | (5,515,427) |
| 2011 ஆம் ஆண்டுக்கான பற்றாக்குறை | | (4,045,876) | | (4,045,876) |
| 2011 டிசம்பர் 31 இலான மீதி | 105,445,722 | (28,035,692) | 366,356,886 | 443,766,919 |

தொல்பொருள் ஆய்வு பட்டப்பின் கற்கை நெறிக்கான நிறுவனம்

2010 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| | 2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறு | 2010 டிசம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளினின்றும் உருவான காசுப்பாய்ச்சல்** | | |
| சாதாரண நடவடிக்கைகளினின்றும் உருவான தேறிய மிகை/(பற்றாக்குறை) | (4,045,876) | 3,597,240 |
| கூட்டுக: காசு அல்லாத நடவடிக்கைகள் | | |
| தீர்த்த கணக்குகள் | (5,515,427) | (5,367,137) |
| தேய்வுகள் | 5,515,427 | 5,387,355 |
| ஊழியர் ஈற்றுக் கொடுப்பனவு ஏற்பாடு | 2,522,115 | 1,278,532 |
| நிலையான சொத்து விற்பனை இலாபம் | - | (758,581) |
| இருப்புகள் இருப்பு | (104,619) | 366,436 |
| விற்பனை/ ஏனைய வருமதிகள் | (371,247) | - |
| கடன்கள்/ சம்பள முற்பணம் | (19,411) | (216,998) |
| முற்பண மூலதனங்கள் | (624,107) | 82,588 |
| வழங்குநர் சேவை முற்பணம் | (528,922) | 11,305 |
| முற்பணக்கொடுப்பனவுகள் | 55,830 | (4,810) |
| ஏனைய நடைமுறை சொத்துக்கள் | 24,372 | - |
| நானாவித சென்மதியாளர் | 385,775 | (418,949) |
| வைப்புகள் | 62,800 | (15,500) |
| சென்மதி செலவுகள் | 975,094 | 366,903 |
| ஏனைய பொறுப்புக்கள் | (1,560,917) | 2,750,708 |
| பொறுப்புக்களிலான அதிகரிப்பு/குறைவு | - | |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளினின்றும் உருவான தேறிய காசுப்பாய்ச்சல்** | (3,229,113) | 7,059,092 |
| **முதலீட்டு நடவடிக்கைகளினின்றும் உருவான காசுப்பாய்ச்சல்** | | |
| நிலம்/கட்டடம்/உபகரணங்கள் கொள்வனவு | (6,369,520) | (7,593,162) |
| வாகன விற்பனை | | 850,803 |
| நிலையான வைப்பு | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளினின்றும் உருவான தேறிய காசுப்பாய்ச்சல்** | (6,369,520) | (6,742,359) |
| **நிதி நடவடிக்கைகளினின்றும் உருவான காசுப்பாய்ச்சல்** | | |
| மூலதன மானியம் : மீளகட்டமைப்பு/முன்னேற்றம் | 5,000,000 | 400,000 |
| மூலதன மானியம் : நூலக நூல்கள் | 200,000 | 600,000 |
| மூலதன மானியம் : சொத்து கொள்வனவு | 14,800,000 | 1,800,000 |
| மூலதன மானியம் : நிலையான கட்டடங்கள் | - | 5,000,000 |
| தகவல் தொழில்நுட்ப மானியம் | | |
| பரிசுகள்/அன்பளிப்புகள் | | |
| விசேட நிதிகள் | | |
| **நிதி நடவடிக்கைகளினின்றும் உருவான தேறிய காசுப்பாய்ச்சல்** | 20,000,000 | 7,800,000 |
| காசு மற்றும் அதற்குச்சமமானவைகளிலான தேறிய அதிகரிப்பு/குறைவு | 10,401,366 | 8,116,733 |
| காலப்பகுதி ஆரம்பத்தின் போதுள்ளவாறான காசு மற்றும் காசு மீதிகள் | 14,205,420 | 6,088,687 |
| காலப்பகுதி முடிவின் போதுள்ளவாறான காசு மற்றும் காசு மீதிகள் | **24,606,786** | **14,205,420** |

## வருடாந்த அறிக்கை 2011

### பேராசிரியர் ராஜ் சோமதேவ

**(அ) மேற்கொண்ட ஆய்வுகள்:**

1. வேட்டைக்காரர்களாக இருந்து தொடக்க நிலை விவசாயத்துக்கு மாறியதை மீள்கட்டமைப்பு செய்யும் தரவு மீட்பு முறையொன்றாக ரன்சாமடம முன்னோடி வரலாற்றுத் தளத்தில் அகழ்வாராய்ச்சி (2011 பெப்ரவரி)

2. தொல்பொருளியல் திணைக்களத்தால் நடத்தப்பட்ட நில்கிரிசாய காப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக லஹுகல வனவிலங்கு சரணாலயத்தில் கணக்கெடுப்பு ஆய்வு (2011 ஜூன்)

3. உடவளவ ஆற்றுப் பள்ளத்தாக்குத் தொல்பொருளியல் தொடர்பாக நடத்தப்படும் ஆராய்ச்சியில் தரவு மீட்பு முறையொன்றாக ஹல்தும்முல்லையில் அகழ்வாராய்ச்சி (2011 பெப்ரவரி)

4. கலை மற்றும் கலாசார அமைச்சினால் நிதியளிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் இலங்கையிலுள்ள கல் ஓவியங்கள் மற்றும் செதுக்கல் தளங்களில் தரவு மீட்பு முறையொன்றாக கல் ஓவியங்கள் மற்றும் செதுக்கல் தளங்களில் கணக்கெடுப்பு ஆய்வு.

**(ஆ). மாநாடுகள்:**

1. 'உடவளவ ஆற்றுப் பள்ளத்தாக்கு தொல்பொருளாய்வு முடிவுகள்' 2011 தேசிய தொல்பொருள் ஆய்வரங்கின் போது முன்வைக்கப்பட்டது.

**(இ) வெளியீடுகள்**

1. உடவளவ ஆற்றுப் பள்ளத்தாக்கு தொல்பொருளாய்வு. அவ்வப்தோதைய பத்திரம். 2. கொழும்பு: தொல்பொருளியல் பட்டமேற்படிப்பு நிறுவனம்

**(ஈ) பொது ஊடகம்**

**அச்சில்.** சோமதேவ. ஆர். 2011. 'கண்டி: ஒரு கற்பனை நகரம்'. சஞ்சிகை 3 ஆம் காலாண்டு. கொழும்பு: அரசாங்க தகவல் திணைக்களம்.

சோமதேவ. ஆர். 2011. 'சீகிரியவும் அதன் கலாசார மரபுரிமையும்'. சஞ்சிகை 2 ஆம் காலாண்டு. கொழும்பு: அரசாங்க தகவல் திணைக்களம்.

சோமதேவ. ஆர். 2011. 'வரலாற்றை மீள்கட்டமைத்தல்'. ராவய 2011 முதல் வாரம்.

## கலாநிதி ரோஸ் சொலங்காரச்சி – சிரேஷ்ட விரிவுரையாளர்

**மேற்கொண்ட ஆய்வுகள்:**

2011:

(1) பலாங்கொட பகுதியில் பழமையான இரும்பு மற்றும் புடக்குகையுருக்கு தளங்களில் (மேல் வளவை – மேற்கு) மீது இனத்தொல்பொருளியல் ஆய்வு.

(2) பலாங்கொட மமல்கஹவிலுள்ள உடுகும்புரவத்த உருக்கு உற்பத்தித் தளத்தில் அகழ்வாராய்ச்சி.

**வெளியீடுகள்:**

2011:

தேசிய அருங்காட்சியகத்தின் *Spolia Zeylenica* வெளியீட்டுக்கு "சீகிரிய இரும்பு நகங்களில் உலோகவியல் ஆராய்ச்சி" இனை சமர்ப்பித்தார்.

**தற்போது மேற்கொள்ளப்பட்டு வருபவை:**

(1) "சீகிரிய-தம்புள்ள பகுதியிலுள்ள தெஹிகஹ–அல–கந்தையில் இரும்புத் தாதினை உருக்குதல் பற்றிய ஒரு உலோகவியல் கண்ணோட்டம்" எனும் கட்டுரை தொல்பொருள் அறிவியல் இதழில் வெளியிடப்படவுள்ளது.

(2) "இலங்கை பெருங்கற் சூழல் சடங்கு முறைகள் பற்றிய உட்குறிப்புகள்" எனும் கட்டுரை "இப்பன்கட்டுவ பெருங்கற் தொகுதி தொல்லியல்" இல் வெளியிடப்படவுள்ளது.

(3) 'இரும்புத் தாதினை உருக்குதல் பற்றிய இனத்தொல்பொருளியல் ஆய்வு மற்றும் பலாங்கொட மமல்கஹவிலுள்ள உடுகும்புரவத்த உருக்கு உற்பத்தி தளத்தில் அகழ்வாராய்ச்சி' எனும் கட்டுரை தொல்பொருளியல் பட்டமேற்படிப்பு நிறுவனத்தின் தொல்பொருளியல் வரலாற்றுத் தொடரில் வெளியிடப்படும்.

(4) அமெரிக்க புளோரிடா பல்கலைக்கழகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட "இரும்புத்தாது உருக்கும் பண்டைய தொழில்நுட்பம் மற்றும் இலங்கை உலர் வலயத்திலுள்ள கிரிஓயா ஆற்றுப் பள்ளத்தாக்கின் படிவு முறை" என்ற பிஎச்டி ஆய்வறிக்கையின் புத்தக வெளியீடு.

## கலாநிதி டீ.ஆர். பிரேமதிலக்க/சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1

1. சுருக்கம்

பிரித்தானிய குயின்ஸ் பல்கலைக்கழக (QUB) புவியியல், தொல் சுற்றாடலியல் மற்றும் தொல்பொருளியல் பாடசாலையில் எனது முதுநிலை பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சித் திட்டத்தை

முடித்த பின்னர், இலங்கையின் மிகச் சமீபகால வானிலை மற்றும் சுற்றாடல் மாற்றங்கள் பற்றிய விரிவான ஆராய்ச்சி திட்டமொன்றுடன் 2009 நடுப்பகுதியில் நான் தொல்பொருளியல் பட்டமேற்படிப்பு நிறுவனத்துக்கு வருகை தந்தேன். இச்செயன்முறையின் போது, புவியியல் விஞ்ஞான இதழின் (Journal of Archaeological Science) ஆசிரியர் பேராசிரியர் சீ.எச்.ஹன்ட் (QUB) அவர்களுடன் இலங்கையின் தொல்சுற்றாடலியல் மற்றும் தொல்பொருளியல் பின்னணியில் எதிர்கால ஆராய்ச்சித் திட்டங்கள்/செயற்பாடுகள் குறித்து விரிவான சந்திப்பொன்றை மேற்கொண்டேன். இப்பின்னணியில், தென்னிந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள புதையுண்ட தொல்பொருளியல் மற்றும் தொல் சுற்றாடலியல் ஆய்வுக்கான புதிய ஆராய்ச்சிக் கருவியாக கிடைக்கக் கூடியதாகவுள்ள தொல் சுற்றாடலியல் ஆராய்ச்சியில் ஈடுபடல் மற்றும் தாவர பாறைப்படிவியலை விருத்தி செய்தல் ஆகியவற்றில் ஆராய்ச்சி சகபணியாளராக பணியாற்ற நான் இந்தியாவிலுள்ள பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனத்திற்கு அழைக்கப்பட்டேன். தெற்காசியாவின் தொல்சுற்றாடல்களின் தொகுப்பை வழங்குதல், POLLANDCAL மற்றும் LANDCLIM மூலம் ஐரோப்பாவில் பரவலாகவுள்ள முறைகளைப் பயன்படுத்தி அயன மண்டலப் பகுதிகளில் நில-மூடுகையை மறுசீரமைத்தல் என்பனவும் இச்செயற்திட்டத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு குறி வைக்கப்பட்டிருந்தது. தொகுப்பில் பெரும்பாலான அயன மண்டலப் பகுதிகளில் கிடைக்கக்கூடிய தொடர்புடைய வரலாற்று மற்றும் தொல்பொருள் தரவுகள் மனிதனால் நிகழும் நில-மூடுகை மறுசீரமைப்புக்கான மேலதிக தகவலாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இது சர்வதேச புவிக்கோள / உயிர்க்கோள செயற்திட்டம் (IGBP) மற்றும் பாண்டிச்சேரி பிரஞ்சு நிறுவனம் ஆகியவற்றின் அனுசரனையில் இடம்பெறும் சர்வதேச ஆராய்ச்சி செயற்திட்டமொன்றாகும். பிறகு விரைவில், பிரித்தானியாவிலுள்ள பிரிட்டிஷ் அக்கெடமி ‘இலங்கையில் நெற்செய்கையின் முன்னோடிகளாக விளங்கியவர்கள் மற்றும் அதன் தோற்றத்தை ஆய்வு செய்தல்’ ஆராய்ச்சித் திட்டத்தை பிரித்தானியா, பெல்பாஸ்ட், குயின்ஸ் பல்கலைக்கழக (QUB) புவியியல், தொல் சுற்றாடலியல் மற்றும் தொல்பொருளியல் பாடசாலையில் நடத்துவதற்கு ஆறு மாத காலத்திற்கு பூரண புலமைப்பரிசிலை வழங்கியது. இவ் வேலைவாய்ப்பு முறைசார் பறிமாற்ற செயற்திட்டமொன்றின் பகுதியாக இருந்ததால் நான் நடமாடும் விரிவுரையாளரொருவரின் நிர்ணய அளவை அடைந்தேன். இத்திட்டத்தின் பெறுபேறுகள் மிகவும் குறிப்பிடத்தக்கவையாகவும், தெற்கு மற்றும் தென்கிழக்காசியாவில் தோற்றம் பெற்ற தொல்பொருளியல், பண்பாட்டு உயிர்ப்புவியியல் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் பெரும் தாக்கத்தைக் காட்டின. எனவே, இத்திட்டத்தில் தொல்பொருளியல் விஞ்ஞான இதழுக்காகத் தயார்படுத்தப்பட்ட வெளியீடுகள் பல நடுவர்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் தொடர்ந்து தற்போது மீட்டலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. சர்வதேச நிகழ்வுகள் பலவற்றில் எனது வானிலை மற்றும் சுற்றாடல் ஆராய்ச்சி பற்றி குறிப்பாக கடந்த கால மனித தூண்டப்பட்ட சூழல் இசைவாக்கங்கள் பற்றி வாய்மூல மற்றும் சுவரொட்டி விளக்கக்காட்சிகள் மூலம் முன்வைப்புகளை மேற்கொள்ள நான் அழைக்கப்பட்டேன். கலாநிதி பிரேமதிலக்க அவர்களின் இச்செயன்முறைகள், ஆராய்ச்சித் துறைகள் மற்றும் சாதனைகள் பற்றிய அறிமுகமொன்றை பின்வரும் அத்தியாயங்களில் காணலாம்.

2. சர்வதேச மற்றும் தேசிய ஒத்துழைப்பின் கீழ் தற்போதைய ஆராய்ச்சிகள் / பட்டப்பின் படிப்புநிலைக் கல்வி

**இயங்கும் திட்டத் தலைப்பு:**

1. பிந்திய குவார்டர்னரியில் (கடந்த 25,000 ஆண்டுகளில்) மத்திய இலங்கை, ஹார்டன் சமவெளியில் சுற்றாடல் மற்றும் வானிலை மாற்றம்.
2. ஹோலுஸீனில் (கடந்த 10,000 ஆண்டுகளில்) இலங்கையில் தாழ்நில நிலக்கரி சதுப்புகளிலிருந்து வானிலை மற்றும் சுற்றாடல் மாற்றங்கள்.
3. இலங்கையில் பிந்திய வரலாற்று காலங்களில் பிரதான பயிர்களின் அறிமுகத்தின் பின் நிலத்தோற்ற மாற்றங்கள்.

4. இலங்கை, யாப்பாஹுவ, கல்சொஹொன்கனத்த பெருங்கல் அடக்கத் தளத்திலிருந்து சேகரிக்கப்பட்ட வண்டல் / மண்ணின் தொல்மகரந்த ஆய்வு.

5. பொருந்தல் (தென்னிந்திய அடக்கத் தளங்கள்) மற்றும் பல தென்னிந்திய குளத் தளங்களில் தொல்தாவரவிழைய (மணல் நுண்சுவடுகள்) தொல்பொருளியல் உட்குறிப்பிடல்.

6. பிந்திய பிளைஸ்டோசின் (கடந்த 50,000 ஆண்டுகள்) போது லோகன் பேர்ன்ட், போர்ணியோவிலிருந்து கிடைத்த மனிதத் தாக்கம் மற்றும் சுற்றாடல் மாற்றங்கள்.

7. இலங்கையில் பிந்திய பிளைஸ்டோசின் மற்றும் ஹோலூஸீன் தாவர பயன்பாடு: பாஹியன் குகைப் படிவுகளில் தொல்தாவரவிழைய ஆய்வு.

8. வாழைப்பழத்தின் ஆரம்பகால கடல்வழிப் பரம்பல்: இலங்கையிலிருந்து கிடைக்கும் சான்றுகள்.

3. ஒத்துழைப்பு நிறுவனங்கள்: தொல்பொருளியல் ஆராய்ச்சிக்கான பட்டமேற்படிப்பு நிறுவனம் (PGIAR), தேசிய ஆராய்ச்சி கவுன்சில் (இலங்கை), புவியியல், தொல் சுற்றாடலியல் மற்றும் தொல்பொருளியல் பாடசாலை, குயின்ஸ் பல்கலைக்கழகம், பிரித்தானியா, கியூ கார்டன் (பிரித்தானியா), தொல்பொருளியல் துறை, லண்ட் பல்கலைக்கழகம் (ஸ்வீடன்), பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனம் (இந்தியா), தொல்பொருளியல் ஆய்வுத் திணைக்களம் (இலங்கை) மற்றும் தொல்பொருளியல் துறை, பேராதனை பல்கலைக்கழகம் (இலங்கை).

4. இலங்கையிலுள்ள பணித்தளங்கள்/காப்பகங்கள்: ஹோட்டன் சமவெளி, நுவரெலியா, முதுராஜவெல (நீர்கொழும்பு கடனீரேரி), சிரிகம்பொல (வென்னப்புவ), எஸ்வத்த (அவசாவிளை), அலுத்வல (ஹிக்கடுவ) மற்றும் புபுரஸ்ஸ (கம்பளை), பாகியன் குகை (புளத்சிங்ஹல) மற்றும் கல்சொஹொன்கனத்த (யாப்பஹுவ).

5. இந்தயா மற்றும் போர்ணியோவிலுள்ள பணித்தளங்கள்/காப்பகங்கள்: பொருந்தால், புளங்குறிச்சி, பரம்புகன்மா, அக்கரம்படம் (தென்னிந்தியா), மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர் (இந்தியா) மற்றும் லோகன் பேர்ன்ட், சரவாக், மலேசிய போர்ணியா.

## 6. நோக்கங்கள்/குறிக்கோள்கள்

எனது தற்போதைய ஆராய்ச்சி அடிப்படை நோக்கங்களாவது, பிந்திய குவார்டர்னரி வானிலை மற்றும் சுற்றாடல் மாற்றங்களை மறுகட்டமைப்பு செய்யதலாகும் (உ-ம்: நீண்ட கால மற்றும் குறுகிய கால வானிலை மாற்றம், மலைசார்ந்த பகுதிகள் மற்றும் தாழ்நில மழைக்காடுகளின் சூழல் இயக்கத்தன்மை, மழைக்காட்டுச் சுற்றாடல்களில் மனித தாக்கங்கள், கடல் மட்ட மாற்றங்களின் விளைவு, மற்றும் இலங்கையில் 'வீட்டுச்சூழலுக்கு இயைவிக்கப்பட்ட அரிசி/மற்றும் விவசாய உறுப்புகளின் தோற்றம். ஐரோப்பா, தென்மேற்கு ஆசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் தெற்கு ஆசியாவில் - "புதிய கற்காலத்தின் ஆரம்ப காலமே "வேட்டையாடும்/தீவனம் தேடும் பொருளாதாரங்கள் (பல்வேறு வழிமுறைகள் மூலம்) விவசாயத்தின் அடிப்படையிலான பொருளாதாரங்களினால், 'வீட்டுச்சூழலுக்கு இயைவிக்கப்பட்ட' தானிய பயிர்களின் (கோதுமை, பார்லி, ஓட்ஸ், தினை, அரிசி) ஒரு சிறிய 'தொகுப்பு' மற்றும் 'வீட்டு' விலங்குகள் (கால்நடைகள், செம்மறி ஆடுகள்/ ஆடுகள், பன்றிகள்) என்பவற்றால் இடம்பெயர்க்கப்பட்ட காலமாகும் என்பது பெருமளவு அறிஞர்களினால் அதிகளவில் கேள்வி எழுப்பப்பட்ட விடயமாகும். இது மிக சுவாரசியமான உலக பிரச்சினைகளுள் ஒன்றாக இருப்பதுடன் இலங்கையிலுள்ள சில

முக்கியமான தொல்பொருளியல் மற்றும் தொல் சுற்றாடலியல் தளங்கள் (உ-ம்: பாஹியன் குகை மற்றும் ஹோட்டன் சமவெளி) மனித வரலாற்றில் மிக முக்கியமான விடயமொன்றாகிய விவசாய மூலங்களை சோதிப்பதற்கான சாத்தியப்பாட்டினைக் கொண்டுள்ளன. இந்த நோக்கத்திற்காக, பரந்த புவியியல் சூழ்நிலைகளினுள் ஏராளமான ஆராய்ச்சி முயற்சிகளில் வலுவான தரவு தொகுதிகளை உருவாக்குதல் அவசியமாகும். எனவே, தற்போதைய ஆராய்ச்சியின் இறுதி நோக்கம் பூகோள மாற்ற திட்டங்களில் மிக முக்கிய விடயமாக பிராந்திய (தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா) வானிலை மற்றும் சுற்றாடல் இயைபுபடுத்தல்களை அபிவிருத்தி செய்வதாகும். (உ-ம்: IPPC: வானிலை மாற்றத்திற்கான அரசாங்கங்களுக்கு இடையிலான குழு, PAGES: கடந்தகால பூகோள மாற்றங்கள், INQUA: குவார்டர்னரி அறிவியல் மற்றும் சர்வதேச ஒன்றியம் மற்றும் IGBP: சர்வதேச புவிக்கோள மற்றும் உயிர்க்கோளத் திட்டம்). இதற்கு மேலதிகமாக, தற்போதைய ஆராய்ச்சியின் நோக்கம் இலங்கை மற்றும் தென்னிந்திய பல்கலைக்கழகங்களிலுள்ள இளம் பட்டமேற்படிப்பு நிலை மாணவர்களுக்கு நிதியத்தின் தலையீடின்றி சாத்தியமற்றதாகவுள்ள கற்கைகளை மேற்கொள்ள வாய்ப்பினை வழங்குவதன் மூலம் குவார்டர்னரி வானிலை மற்றும் இலங்கையின் சுற்றாடல் மாற்றத்தை புரிந்துகொள்ளும் திறனை உருவாக்குவதாகும். தற்போது, ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஆதரிக்கும் நிறுவனங்கள்: புவியியல், தொல் சுற்றாடலியல் மற்றும் தொல்பொருளியல் பாடசாலை, குயின்ஸ் பல்கலைக்கழகம், பிரித்தானியா, தொல்பொருளியல் துறை, லண்ட் பல்கலைக்கழகம், ஸ்வீடன், தொல்பொருள் ஆய்வு மற்றும் தொல்பொருளியல் துறை, பேராதனை பல்கலைக்கழகம், இலங்கை. மேலும், நிறுவப்பட்ட ஒன்றிணைப்பு மற்றும் செல்-50 ஆயிரம் வருடங்களுடன் இணைப்பைப் பெறுவதற்கான அணுகுதல், கடந்த 50 ஆயிரம் வருட சுற்றாடல் முன்னேற்றங்கள் மற்றும் பின்னடைவுகளை அளவிடல் மற்றும் INTIMATE FO/PAGES/INQUA வின் பகுதியாக IFG என்பவற்றுடன் நான் எனது ஆய்வு நடவடிக்கைகளைத் தொடர விரும்புகிறேன்.

திட்டத்தின் முக்கிய பணிகளாவன தொல் சுற்றாடலியல் மற்றும் தொல்பொருளியல் தளங்களிலிருந்து விளக்கமான உயர் தெளிவுத்திறனுள்ள ரேடியோ காபன் தேதியிடப்பட்ட பாறை மற்றும் உயிர் அடுக்கியற் படிவாக்கக் கூறுகளைக் கட்டமைத்து பொருள் விளக்குவதாகும். இந்த அடுக்கியற் படிவாக்கக் கூறுகள் உள்ளடக்கியுள்ளவை: சேதன காபன், உயர்/தாழ் மீடிறன் காந்த ஏற்புத்திறன், Palynofacies (மகரந்தங்கள், வித்திகள், இரு சவுக்குமுளைத் தனிக்கல அங்கிகள், பொராமினிபெராக்கள்-சுண்ணாம்பினால் உருவான ஓட்டைக் கொண்ட தனிக்கல விலங்குகள், அல்காக்கள், நுண்-கரி, வெப்ப முதிர்ச்சியடைந்தவை, VAM-பங்கசுக்கள்), பாசிப் பெருஞ்சுவடுகள், மணற்பாங்கான நுண்சுவடுகள் (தாவரப்பாறைப் படிவங்கள் மற்றும் தயற்றங்கள்). இச்செயன்முறைகளில், தொல்பொருளியல் மற்றும் தொல் சுற்றாடலியல் தளங்களிலுள்ள மகரந்தங்கள் மற்றும் தாவரப் பாறைப்படிவ உயிர்ச்சுவட்டியல் ஆய்வும் உள்ளடங்கும்.

**7. ஆராய்ச்சி சாதனைகள்**

சர்வதேச உயர் தாக்கம் இதழ் வெளியீடு

பிரேமதிலக்க.ஆர். 2011. மத்திய இலங்கை, ஹோட்டன் சமவெளியில் மேல் மலைசார்ந்த சுழற்றொகுதியை மனிதன் உபயோகித்தான் – பிந்திய பனியுறைவு மற்றும் ஆரம்ப ஹோலுஸீன் வானிலை மற்றும் சுற்றாடல் மாற்றங்களுக்கான ஓர் இணைப்பு.

குவார்டர்னரி விஞ்ஞான மதிப்புரைகள் 50, 23-42

**முன்னேற்றத்தில் உள்ளவை:**

பிரேமதிலக்க.ஆர். 2010-2011. கி.மு. 420 மற்றும் கி.பி 20 இற்கிடையிலான இலங்கையின் மலர்கள் மற்றும் சவக்கிடங்கு சடங்குகள். புவியியல் விஞ்ஞான இதழ் (ஏற்கப்பட்டுள்ளது)

ஹன்ட்.சீ.ஓ, பிரேமதிலக்க.ஆர், ராபெட்.ஆர், 2011-2011. தென்கிழக்காசியா மற்றும் அவுஸ்திரலேசியாவில் புதிய கற்கால எண்ணக்கரு: ஒரு கணிப்பாய்வு. புவியியல் விஞ்ஞான இதழ் (ஏற்கப்பட்டுள்ளது)

பிரேமதிலக்க.ஆர் மற்றும் ஹன்ட்.சீ.ஓ, 2011-2011. இலங்கை, பாகியன் குகையில் பிந்திய பிளைஸ்டோசின் தொடரில் தாவர பாறைப்படிவ ஆய்வு. புவியியல் விஞ்ஞான இதழ் (ஏற்கப்பட்டுள்ளது)

பிரேமதிலக்க.ஆர், நிவாசன்.பீ, கிருஷ்ணமூர்த்தி.ஏ, ராஜன்.கே, குமார்.வை.வீ.பீ., (2011-2011).

தென்னிந்திய ஆரம்ப இரும்பு யுக நிலத்தோற்றம் மற்றும் மனித செயற்பாடுகளை மதிப்பிடுதல்: பெருங்கற் புதை தளமொன்றில் தாவர பாறைப்படிவ மற்றும் தொல்பொருளியல் கற்கை (மீட்டலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது)

8. சர்வதேச மாநாடு, சந்திப்பு மற்றும் கலந்துரையாடல்: பணி மற்றும் பதாகை முன்வைப்பு வெளியீடு

கிடைக்கக்கூடியதாகவுள்ள தொல் சுற்றாடலியல் தரவுகள்: ‘இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் தொல் சுற்றாடல் ஆராய்ச்சி’ எனும் வாய்மூல முன்வைப்பு சர்வதேச புவிக்கோள மற்றும் உயிர்க்கோள வேலைத்திட்டத்தில் (IGBP, PAGES, பணிப்பட்டறை ஜனவரி 27-29 பருவ மழையினால் பாதிக்கப்பட்ட அயன மண்டல உலகின் நில மூடுகை மீள்கட்டமைப்பு - மகரந்த மாதிரியாக்க அணுகுமுறை மற்றும் தரவுத் தொகுப்பு, பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனம், இந்தியா, 2011.

மத்திய இலங்கை, ஹோட்டன் சமவெளியில் பிந்திய குவார்டர்னரி குவார்டர்னரியில் மலைசார்ந்த மழைக்காட்டு மாற்றங்கள் பற்றி வாய்மூல முன்வைப்பு/கலந்துரையாடல்: பல்-பதிலி பயன்பாடுகள். வானிலை மாற்றத்தின் தாக்கமும் உயிர்ப்பல்வகைமையும் பற்றிய தேசிய கருத்தரங்கில். தாவர விஞ்ஞானத்துறை, பட்டமேற்கற்கைக்கான காஞ்சி மாமுனிவர் நிலையம், பாண்டிச்சேரி, இந்தியா, 2011.

இலங்கை மற்றும் தென்னிந்திய தொல் சுற்றாடலியல் மற்றும் தொல்பொருளியல் சூழலிலுள்ள தாவர பாறைப் படிவங்களின் பயன்பாடுகள் பற்றி வாய்மூல முன்வைப்பு/கலந்துரையாடல். தொல் சுற்றாடலியல் பற்றிய மாதாந்தக் கருத்தரங்குத் தொடரில், பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனம், இந்தியா, 2011.

மத்திய இலங்கை, ஹோட்டன் சமவெளியில் தொல் சுற்றாடலியல் வானிலை மற்றும் சுற்றாடல் மாற்றங்கள் பற்றிய பதாகை முன்வைப்பு/கலந்துரையாடல். சர்வதேச புவிக்கோள மற்றும் உயிர்க்கோள வேலைத்திட்டத்தில், (IGBP, PAGES, PHAROS பணிப்பட்டறை 2011 ஜனவரி 27-29 பருவ மழையினால் பாதிக்கப்பட்ட அயன மண்டல உலகின் நில மூடுகை மீள்கட்டமைப்பு - மகரந்த மாதிரியாக்க அணுகுமுறை மற்றும் தரவுத் தொகுப்பு, பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனம், இந்தியா, 2011.

பொருந்தாலில் (இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் அருகிலுள்ள பெருங்கற்களாலான புதை தளத்தில்) தாவரப்பாறைப் படிவ கற்கையின் தொல்பொருளியல் உட்குறிப்பு பற்றிய பதாகை முன்வைப்பு/கலந்துரையாடல். சர்வதேச புவிக்கோள மற்றும் உயிர்க்கோள வேலைத்திட்டத்தின் கீழ் பாண்டிச்சேரி பல்கலைக்கழக தொல்பொருளியல் மற்றும் வரலாற்றுத்துறை, பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் (IGBP, PAGES பணிப்பட்டறை 2011 ஜனவரி 27-29 பருவ மழையினால் பாதிக்கப்பட்ட அயன மண்டல உலகின் நில மூடுகை மீள்கட்டமைப்பு - மகரந்த மாதிரியாக்க அணுகுமுறை மற்றும் தரவுத் தொகுப்பு, பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனம், இந்தியா, 2011.

தொல் சுற்றாடலியல் மற்றும் ஆரம்ப அரிசிச் செய்கையின் தோற்றம் பற்றிய பதாகை முன்வைப்பு /கலந்துரையாடல். சர்வதேச புவிக்கோள மற்றும் உயிர்க்கோள வேலைத்திட்டத்தில், (IGBP, PAGES, PHAROS பணிப்பட்டறை 2011 ஜனவரி 27-29 பருவ மழையினால் பாதிக்கப்பட்ட அயன மண்டல உலகின் நில மூடுகை மீள்கட்டமைப்பு - மகரந்த மாதிரியாக்க அணுகுமுறை மற்றும் தரவுத் தொகுப்பு, பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனம், இந்தியா, 2011.

பிந்திய பிளைஸ்டோசின் மற்றும் ஆரம்ப ஹோலுஸீன் வானிலை மற்றும் மத்திய இலங்கை, ஹோட்டன் சமவெளியில் சுற்றாடல் மாற்றங்கள் பற்றிய பதாகை முன்வைப்பு /கலந்துரையாடல். குவார்டர்னரி அறிவியல் சர்வதேச ஒன்றியம், காங்கிரஸ் ஜூலை-20-28, 2011, பெர்ன் நகரம், சுவிட்சர்லாந்து, 2011.

போர்ணியோவில் 'புதிய கற்காலம்': வேறுபட்டதொரு மாதிரி, குவார்டர்னரி அறிவியல் சர்வதேச ஒன்றியம், காங்கிரஸ் ஜூலை-20-28, 2011, பெர்ன் நகரம், சுவிட்சர்லாந்து, 2011. (கூட்டு முன்வைப்பு சீ.எச்.ஹன்ட், ஆர்.பிரேமதிலக்க மற்றும் எஸ்.ஜோன்ஸ்), 2011.

9. PAL-LAB, தொல்பொருளியல் ஆராய்ச்சி தொடர்பான பட்டமேற்படிப்பு நிறுவனம், மற்றும் பிரித்தானிய குயின்ஸ் பல்கலைக்கழகம் என்பவற்றில் முன்னேற்றத்திலுள்ள பணிகள் (ஆராய்ச்சிப் பணிகள் தொடர்கின்றன..)

ஹன்ட்.சீ.ஓ மற்றும் பிரேமதிலக்க.ஆர், 2010-2011. லோகன் பேர்ன்ட், சரவாக், மலேசிய போர்ணியோ ஆகிய இடங்களின் ஆரம்ப ஹோலுஸீன் தாவரங்கள் மற்றும் வானிலை வரலாறு.

தொல் சுற்றாடலியல், தொல் புவியியல் மற்றும் தொல் வானிலையியல் (ஆய்வுகூட பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது)

ஹன்ட்.சீ.ஓ மற்றும் பிரேமதிலக்க.ஆர், 2010-2011. ஆரம்ப ஹோலுசீன் காட்டு மற்றும் தென்கிழக்காசிய போர்ணியோவில் பயிர்செய்யப்பட்ட அரிசி. தொல்பொருளியல் விஞ்ஞான இதழ் (ஆய்வுகூட பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது)

### 10. வருகை விரிவுரைகள்

கொழும்புப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் பல விரிவுரைகளை (10 மணித்தியாலம்) வழங்கவும், செயன்முறை வகுப்புகளை (5 மணித்தியாலம்) மேற்கொள்ளவும் நான் அழைக்கப்பட்டுள்ளேன். உயிரியல் விஞ்ஞானம் மற்றும் மானுடவியல் கற்றுள்ள பட்டப்படிப்பு மாணவர்களை அடிப்படையாக்க் கொண்டதாக இவ்வேலைத்திட்டம் அமைந்திருந்தது. குறிப்பு: இந்த அனைத்துச் செயற்பாடுகளும் எவ்விதக் கொடுப்பனவும் பெறாமல் நிறைவேற்றப்பட்டவை ஆகும்.

### 11. ஏனைய பணிகளுக்கான ஆதரவு

இலங்கை, தொல்பொருளியல் ஆய்வுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட திட்டத்தில் எனது நிபுணத்துவத்தை வழங்குமாறு நான் அழைக்கப்பட்டேன். இந்த திட்டம் வரலாற்று மர நினைவு சின்னங்களைக் காக்கும் சில அம்சங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது. எனது பங்களிப்பு சுற்றாடற் தரவுகளை (மர நினைவுச் சின்னங்களுடன் தொடர்பான ஈரப்பதன் மற்றும் ஒளி நிலைமை வேறுபாடுகள்) சேகரிப்பதற்கான முறையியலான கட்டுப்படுத்தலை வழங்குதலும் காப்புத் தேவைகளுக்கு நடவடிக்கைகளுக்கு எடுப்பதற்கு அவசியமான அடிமட்ட அறிக்கையொன்றைத் தயரிப்பதற்கான தரவு முகாமைத்துவத்தை மேற்கொள்வதுமாக இருந்தது. இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் தொல்பொருளியல் ஆய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த திருமதி குமாரி தஸநாயக்க அவார். திட்டத்தில் பிரித்தானிய ஒக்ஸ்போட் பல்பலைக்கழக புவயியல் மற்றும் சுற்றாடல் பாடசாலையினால் நடத்தப்பட்டு வரும் ‘இந்திய மேற்குத்தொடர் மலைகளின் கலாசார நிலத்தோற்ற மனித முகாமைத்துவ மரபுகள்’ திட்டத்தில் நான் ஒரு ஆராய்ச்சி ஆலோசகராக பணியாற்றினேன். எமது உலக மரபுரிமையொன்றாக ஹோட்டன் சமவெளியை முன்மொழிவதற்கு பயன்மிகு கூட்டம் மற்றும் கலந்துரையாடலைப் பெறுவதில் இலங்கை சுற்றாடல் அமைச்சுக்கும் எனது சேவையை வழங்கினேன்.

### 12. பொது மக்கள் மற்றும் ஊடகங்களுடன் அறிவுப் பறிமாற்ற அனுபவங்கள்

2011 ஜனவரி 24 இல் இந்தியா, சென்னை கிருத்துவக் கல்லூரி பட்டமேற்படிப்பு நிறுவனத்தில் தாவரப் பாறைப்படிவங்களின் பயன்பாடுகள் பற்றிய பகிரங்கச் சொற்பொழிவு.

2011 ஜனவரி 25 இல் இந்தியா, சென்னை பல்கலைக்கழக பட்டமேற்படிப்பு ஆராய்ச்சி நிறுவனத்தில் இலங்கையில் பிந்திய குவார்டர்னரியில் (கடந்த 25,000 ஆண்டுகள்) மழைக்காட்டு மாற்றங்கள் பற்றிய பகிரங்கச் சொற்பொழிவு.

2011 திங்கட்கிழமை 16 இல் கொழும்பு அய்ட்கென் ஸ்பென்ஸ் டிராவல் (பிரைவேட்) லிமிட்டெட் அனுசரணையில் நடத்தப்பட்ட வருடாந்த பயிற்சி வேலைத்திட்டத்தின் போது இலங்கையின் வானிலை மாற்றமும் வர்த்தகப் பயிர்களும் பற்றிய பகிரங்கச் சொற்பொழிவு.

**13. தொல்பொருளியல் ஆராய்ச்சிக்கான பட்டமேற்படிப்பு நிறுவனத்தில் மேற்கொள்ளும் வழக்கமான பணி**

சுற்றாடல் தொல்பொருளியலுக்கான பிரதம விரிவுரையாளராக நான் கடமையாற்றினேன். இதற்கு மேலதிகமாக, தொல்பொருளியல் ஆராய்ச்சிக்கான பட்டமேற்படிப்பு நிறுவனத்தில் டிப்ளோமா மற்றும் முதுநிலை மாணவர்களுக்கு திட்டமிடப்பட்டிருந்த பரீட்சை மேற்பார்வைப் பணி நேரசூசிக்கேற்ப நிறைவு செய்யப்பட்டன. ஒரு முதுநிலை மாணவர் ஆய்வறிக்கை (MS.C) மேற்பார்வை செய்யப்பட்டதுடன் டிப்ளோமா மதிப்பீடுகளை முடிக்க தேவையான நடவடிக்கைகள் / வழிகாட்டல்கள் (சுமார் 35) வழங்கப்பட்டன. பாடத்திட்ட இற்றைப்படுத்துதல், செயன்முறைப்பயிற்சிகள், களவேலைகள், கற்பித்தல்கள், பரீட்சை வேலைகள் போன்ற பட்டமேற்படிப்பு மாணவர்களுடன் தொடர்பான தொல்பொருளியல் ஆராய்ச்சிக்கான பட்டமேற்படிப்பு நிறுவன கல்விசார் துணைப் பணிகளில் நான் ஈடுபட்டுள்ளேன். தொடர்பான கல்விசார் பணிகள் (விரிவுரைகள், குறுவட்டு மற்றும் பிற முன்வைப்புகள் தயாரித்தல்) பட்டமேற்படிப்பு நிலை மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டன. தொல்பொருளியல் ஆராய்ச்சிக்கான பட்டமேற்படிப்பு நிறுவனத்தில் சுற்றாடல் தொல்பொருளியல் தொடர்பான விடயங்களை (உ-ம்: அடுக்கியற்படிவு குடைவு, களப்பணி, அடிப்படை நிர்வாகம், ஆய்வுக்கூடப் பணி) விருத்தி செய்வதற்குத் தேவையான செயன்முறைப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. தொல்பொருளியல் ஆராய்ச்சிக்கான பட்டமேற்படிப்பு நிறுவனத்தில் 2011 ஆம் ஆண்டுக்கான கணிப்பாய்வுக்குழு தொழினுட்ப உறுப்பினராகக் கடமையாற்றுமாறும் நான் வேண்டப்பட்டேன். எனது களப் பணிகள், தற்போதைய ஆராய்ச்சி மற்றும் எனது ஆராய்ச்சி மற்றும் கல்வியுடன் தொடர்பான மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்களில் பங்குபற்றுதல் என்பவற்றுக்கு ஏதேனும் பொது/அரச/தொல்பொருளியல் ஆராய்ச்சிக்கான பட்டமேற்படிப்பு நிறுவன நிதியினை நான் பயன்படுத்தியதில்லை என்பதை அவசியம் கவனிக்கவும். ஆனால், நேரடி/மறைமுக ஆதரவு மற்றும் நிறுவப்பட்ட ஒன்றிணைப்பு மூலம் சகல செயற்பாடுகளும் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் நான் எனது ஆராய்ச்சி முடிவுகள்/ஆவணங்கள் என்பவற்றைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் (உ-ம்: IPPC, PAGES, INQUA, IGBP) பிராந்திய/பூகோள ஆராய்ச்சி வினாக்களுக்கு கவனம் செலுத்திக் காப்பாற்றிக் கொண்டேன். Journal of Archaeological Science, Quaternary International, Palaeoecology, Palaeoclimatology and Palaeogeography (P3), Grana and Quaternary Science Review போன்ற உலகின் சிறப்பு வெளியீட்டிதழ்களின் அபார வளர்ச்சியை அதிக ஆர்வத்துடன் பின்பற்றி தொல்பொருளியல் ஆராய்ச்சிக்கான பட்டமேற்படிப்பு நிறுவனத்தில் எனது கடமைகளை செவ்வனே நிறைவேற்றியுள்ளதை நான் உணர்கிறேன்.

**கலாநிதி. திருமதி. பீ. விதானபதிரன**

2011 இலங்கையில் வடமேற்குக் கடற்கரை பகுதியின் ஆரம்ப மற்றும் நடுத்தர வரலாற்று முக்கியத்துவத் துறைமுக நகரங்கள்

குலசேகர.கே.ஏ, கருணாந்நதா மற்றும் கொக்கலகே.டீ(eds), பேராசிரியர் ஏ.லியனகமகே சில்வா வாழ்த்தற் தொகுதி கொடகே வெளியீட்டகம், கொழும்பு.

2011 அ அனுராதபுர மாவட்டத்திலுள்ள வரலாற்றுச் சிறப்பான பிராந்திய பிரதேச அலகு. எம்.அமரசிங்ஹ (eds) அப்பா ஆரியசிங்ஹ வாழத்தற் தொகுதி, எஸ்.கொடகே வெளியீட்டகம், கொழும்பு.

2011 ஆ பண்டைய இலங்கையின் பொலன்னறுவை மற்றும் புறநகர் பகுதிகளில் வீதி வலையமைப்பின் இடஞ்சார்ந்த விநியோக அமைப்பு. நிபுன ப்ப்ளிகேஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டெட், இலங்கை.

2011 இ நிகவளமுல்லவிலுள்ள ஆதி வரலாற்று தளத்தின் புவியியல் அமைப்பு. ஜே.வீரசிங்ஹ மற்றும் ஜீ.அதிகாரி (eds) ருவன்வெல்லவிலுள்ள ஆதி வரலாற்று தளம், தொல்பொருளியல் ஆராய்ச்சிக்கான பட்டமேற்படிப்பு நிறுவனம், கொழும்பு.

2011 ஈ இலங்கை, தென் மாகானத்தின் வரலாற்று இடவிளக்கவியல். ஜே.வீரசிங்ஹ மற்றும் டப்ளிவ்.போஹிங்கமுவ (eds) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்ட(UNDP) வெளியீடு.

2011 உ இலங்கை, தென் மாகானத்தின் வரலாற்று எல்லைகள். ஜே.வீரசிங்ஹ மற்றும் டப்ளிவ்.போஹிங்கமுவ (eds) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்ட(UNDP) வெளியீடு.

**திரு. ரஞ்சித் பண்டார 2011**

1. கல்விசார் பணிகளுக்குப் புறம்பாக நடத்தப்பட்ட செயற்பாடுகள்

1. i. திட்டப் பணி

மட்படகு மயான மீட்பு அகழ்வாராய்ச்சித் திட்டம் 2010-2011, தொல்பொருளியல் ஆராய்ச்சிக்கான பட்டமேற்படிப்பு நிறுவனம்.

**ii. திட்டப் பணி**

பிரதம ஆராய்ச்சியாளர்

யான்ஓயா மத்திய பள்ளத்தாக்கு சவக்கிடங்கு தொல்பொருள் ஆராய்ச்சி திட்டம் 2011-2014 (YOMB) தொல்பொருளியல் ஆராய்ச்சிக்கான பட்டமேற்படிப்பு நிறுவனம்.

கட்டம் 1 - தொல்பொருள் ஆய்வு 2011 ஜுலை – செப்டம்பர்

**YOMB திட்டம் 2011-2014**

யான்ஓயா மத்திய பள்ளத்தாக்கு ஆராய்ச்சித் திட்டம்: சமூக மதிப்பீடு மற்றும் சமூக சமத்துவமின்மையின் வெளிப்பாட்டைக் கண்டுபிடிப்பதை மையமாக்க் கொண்ட பல் ஒழுங்கு ஆராய்ச்சி திட்டம். இந்த ஆராய்ச்சி திட்டத்தின் ஒட்டுமொத்த குறிக்கோள், கி.மு. முதலாம் ஆயிரமாண்டுக்குத் தேதியிடப்பட்டுள்ள இலங்கையின் ஆதி வரலாற்றுக் கால தொல்பொருள் எச்சங்களில் பிரதிபலிக்கும் சமூக தரப்படுத்தல்களைக் கற்றலாகும். ஆதி வரலாற்றுக்கால தொல்பொருள் எச்சங்களுக்குக் காரணமான மக்களே பெரும்பாலும் முதல் விவசாயிகளாக இருந்திருப்பரென ஊகிக்கப்படுகிறது. இக்கற்கையில், இலங்கை வடமத்திய மாகாண யான் ஓயா ஆற்று பள்ளத்தாக்கின் ஆதி வரலாற்றுக் காலத்துக்குச் சொந்தமான சவக்கிடங்கு எச்சங்களின் மீது குறிப்பாக இக்கால பெருங்கற்களாலான இடுகாடுகள் மீதும் தொல்பொருள் நிலத்தோற்றத்தில் அவற்றின் நிலைப்படுத்தல் மீதும் கவனம் செலுத்தப்படுகிறது. அத்துடன் பட்டறைகள், மாநாடுகள் நடத்தவும், தொல்பொருள் ஆராய்ச்சிச் சூழல் நிலையான சவக்கிடங்கை உருவாக்கவும் கவனம் செலுத்தப்படுகிறது.

**iiii. திட்டப்பணி**

களப்பணிப்பாளர்,

யாப்பஹுவ வரலாற்றுதள வரைபடத் திட்டம் 2011, தொல்பொருளியல் ஆராய்ச்சிக்கான பட்டமேற்படிப்பு நிறுவனம்.

2. தொல்பொருளியல் ஆராய்ச்சிக்கான பட்டமேற்படிப்பு நிறுவன பணிப்பாளரின் முன் அனுமதியோடு வேறு நிறுவனங்களில் நிறைவேற்றப்பட்ட கடமைகள்.

**2.1, களப்பணி**

2.1.i. தொல்பொருளியல் ஆராய்ச்சிக்கான பட்டமேற்படிப்பு நிறுவனத்தினால் 2010-2011 இல் நடத்தப்பட்ட நிக்கவலமுல்ல மட்படகு மயான மீட்பு அகழ்வாராய்ச்சி களப்பணித் திட்ட இணை பணிப்பாளராகப் பங்குபற்றினேன்.

2.2. i. தொல்பொருளியல் ஆராய்ச்சிக்கான பட்டமேற்படிப்பு நிறுவனத்தினால் 2010 இல் ருவன்வெல்ல, நிக்கவலமுல்லவில் நடத்தப்பட்ட விஞ்ஞான முதுநிலை களப் பாடசாலைக்கு ஆசிரியரொருவராகப் பங்குபற்றினேன்.

**2.4. கற்பித்தல்**

2.4.i. கற்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக கற்புலக் கலைகள் பீட பீங்கான் கலைத்துறையில் வருகை விரிவுரையாளராக நியமிக்கப்படல்.

2.4.ii. களனி பல்கலைக்கழக தொல்பொருளியல் துறை வருகை விரிவுரையாளராக நியமிக்கப்படல்.

**3. வெளியீடுகள்.**

3.1 வெளியீடுகள் (சர்வதேச)- ‘குளக்கிராமவாசிகள் மத்தியில் கிராமக் கைவிடல் நடத்தைகள்: இலங்கை உலர் வலயத்தில் குளக்கிராமமொன்றின் மீதான தாங்குதிறன்

விளைவு' எனும் ஆக்கத்தை மங்கல கட்டுகம்பொல, திலக் காமினி பிரியன்த, அமல்கா விஜேசூரிய மற்றும் வண. சந்திம ஆகியோரோடு இணை ஆசிரியராகவிருந்து தெற்காசிய தொல்பொருளியல் சங்கத்தின் இலங்கையின் 3 வது சர்வதேச காங்கிரஸ் சுருக்கத் தொகுதிக்கு பங்களிப்புச் செய்யப்பட்டது.

5. அறிவு பரப்புதல்

5.1, 'இலங்கை பண்டைய சவக்கிடங்கு நடைமுறைகள்' எனும் தலைப்பில் ஊஊகு பொலன்னறுவை அலஹன பிரிவெனா திட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் தொல்பொருளியல் அருங்காட்சியக பொதுக் கேட்போருக்கான பகிரங்கச் சொற்பொழிவு வழங்கப்பட்டது.

6. தற்போதைய ஆராய்ச்சிகள்

6.i. அ சமூக தரப்படுத்தலின் தோற்றத்தைக் கண்டறியும் மத்திய யான் ஓயா ஆற்றுப் பள்ளத்தாக்கு தொல்பொருளியல் ஆராய்ச்சித் திட்டமாக ஆராய்ச்சித் திட்டமொன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

6.ii. பிஎச்டி க்கான படித்தல்

எனது பிஎச்டி கற்கைக்காக சவக்கிடங்கு தொல்பொருளியல் மற்றும் மானுடவியல் தொல்பொருளியல் பற்றி எழுதப்பட்ட புத்தகங்களைக் கற்று வருகிறேன்.

**டீ.பீ.கம்லத் – விரிவுரையாளர்**

- **மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள்**

புத்தர் பட வீடுகளின் உண்மையான தேதியை நிரூபிக்க மேலும் தொல்பொருள் தரவுகளைச் சேகரிப்பதற்காக தெவல்ல, தெவ்ரம்வெஹெர, முகுலேவ பகுதிகளில் அகழ்வாய்வுகளை மேற்கொள்ளல்.

**கலாநிதி டப்ளிவ். எஸ். வெலியன்கே.**

**மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள்**

1.1 வேடர் திட்டம்

ரத்துகலவுக்கு ஐந்து களப்பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. (தேதிகளுக்கு அட்டவணை 1 இனைப் பார்க்கவும்) சுமார் 25 நாட்கள் வேடர்களுடன் கழிக்கப்பட்டன. வேடர்களின் வளப் பயன்பாடு பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டதோடு சுமார் 15 குகைக் குடியிருப்புகள் வரைபடமாக்கப்பட்டன.

1.2 இலங்கை குகை அறிவியல்

**அட்டவணை 2.**

| | |
|---|---|
| 2011 | சுரங்கப்பாதைக் குகை மற்றும் தொடர், ஆற்றின் மேல் = தேவியன்பென்ன கலக"ஹவ. வாரன ரஜமகா விகாரையிலுள்ள குகைகள், கொஸ்கந்தவல ரஜமகா விகாரையிலுள்ள குகைகள், பிலிகுத்துவ ரஜமகா விகாரையிலுள்ள குகைகள், மா லென, கரங்கொட ரஜமகா விகாரையிலுள்ள குகைகள், |

<u>சுருக்கங்கள்</u>

1. வெலியன்கே.டப்ளிவ்.எஸ்., அலகிரிய.பீ, தன்தெனிய.ஏ.எஸ்., அலஹகோன்.ஏ.எம்.டீ. மற்றும் டீ.தேவகே. 2011. வேடர்களின் இனப் பறவையியல்: இலங்கையின் வன்னியாலே அத்தோ. 12 வது வருடாந்த ஆராய்ச்சி ஆய்வரங்கு, களனி பல்கலைக்கழகம், 3-4 நவம்பர் 2011. களனி பல்கலைக்கழகம், பக்கம் 182.

2. அலகிரிய.பீ, தன்தெனிய.ஏ.எஸ்., அலஹகோன்.ஏ.எம்.டீ. மற்றும் வெலியன்கே.டப்ளிவ்.எஸ். 2011. இலங்கை, வாகரையிலுள்ள கரையோர வேடர்களின் தற்போதைய நிலை. 12 வது வருடாந்த ஆராய்ச்சி ஆய்வரங்கு, களனி பல்கலைக்கழகம், 3-4 நவம்பர் 2011. களனி பல்கலைக்கழகம், பக்கம் xxx**181.**

3. அலகிரிய.பீ, தன்தெனிய.ஏ.எஸ்., அலஹகோன்.ஏ.எம்.டீ. மற்றும் வெலியன்கே.டப்ளிவ்.எஸ். 2011. இலங்கையின் மட்டக்களப்பு மாவட்ட வாகரையில் ஒரு இரும்பு உருக்கும் தளம் கண்டுபிடிப்பு. 12 வது வருடாந்த ஆராய்ச்சி ஆய்வரங்கு, களனி பல்கலைக்கழகம், 3-4 நவம்பர் 2011. களனி பல்கலைக்கழகம், பக்கம் 8.

4. பத்மகுமார ஜயசங்ஹ, தன்தெனிய.ஏ.எஸ், சமன் சேனாநாயக்க, மஹேஷ் சம்பிகா, டப்ளிவ்.ஜீ.. தேவகா.ஆர். மற்றும் டப்ளிவ்.எஸ்.வெலியன்கே. 2011. மா-லென் இலங்கையின் ஒரு பளிங்குக் குகை. 12 வது வருடாந்த ஆராய்ச்சி ஆய்வரங்கு, களனி பல்கலைக்கழகம், 3-4 நவம்பர் 2011. களனி பல்கலைக்கழகம், பக்கம் 73. பதாகை முன்வைப்பு.

## 2. <u>வெளியீடுகள்</u>

<u>புத்தகங்க அத்தியாயங்கள்</u>

1. வெலியன்கே.டப்ளிவ்.எஸ். மற்றும் ஆர்.ஏ.எல்.ஒஸ்போர்ன். 2012. இலங்கை குகைகளின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்துக்கான சில உயிரியல் அம்சங்கள். பக்கங்கள் 209-229. ராஜ் சோமதேவ(ed.). இலங்கையின் பாறை ஓவியம் மற்றும் செதுக்கல் தளங்கள். PGIAR வெளியீடு. பக்கம் 236.

## 2011 இல் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள்

1. ஒஸ்போர்ன்.ஆ.ஏ.எல்., வெலியன்கே.டப்ளிவ்.எஸ்., ஜயசிங்ஹ பத்மகுமார, தன்தெனிய.ஏ.எஸ். மற்றும் பொஸ்கன்.ஆர்.ஈ., தெற்கு மற்றும் மத்திய இலங்கை பகுதியில் ப்ராடரெசாய்க் நெய்ஸ் மற்றும் கம்பிரியன் கருங்கற்களில் குகைகள் மற்றும் சிதைந்த படிவு போன்ற அம்சங்கள்: ஓர் அறிமுகம். Acta Carsologica வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

2. உபாலி எஸ்.அமரசிங்ஹ, ஜேகோபஸ் விஸ்வர்பேர்க், வசந்தா எஸ்.வெலியன்கே மற்றும் மத்ஹிஜிஸ் வொஸ். அயனமண்டல மீன் சமூகங்களில் உணவு வலை கோலங்களும் பல்வகைமையும். டுயமநள யனெ சநளநசஎழசைள இற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

## தயாரிப்பிலுள்ள கையெழுத்துப் பிரதிகள்

1. வெலியன்கே.டப்ளிவ்.எஸ். இலங்கையில் வரலாற்றுக்கு முந்தைய காலங்களில் பாலூட்டிகளை வேட்டையாடுவதின் போதான இடைவெளியும் நேரமும்.

2. வெலியன்கே.டப்ளிவ்.எஸ்., தன்தெனிய.ஏ.எஸ். மற்றும் பீ.அலகிரிய கடந்த காலத்துக்கான பயணம் 21 ஆம் நூற்றாண்டின் வன்னியாலே அத்தோ (வேடன்) உடன் வரலாற்றுக்கு முந்திய மனிதனைக் கண்டறிதல்

3. வெலியன்கே.டப்ளிவ்.எஸ்., ஜயசிங்ஹ பத்மகுமார, தன்தெனிய.ஏ.எஸ். மற்றும் பீ.அலகிரிய. இலங்கையின் சில வரலாற்றுக்கு முந்தைய குகைகளின் குகைளைப் பற்றிய அறிவியல் ஆய்வு.

## பொது ஊடகம்

"The Daily News" தேசிய தினசரியில் வெளியிடப்பட்ட ஆக்கங்கள்

1. இருட்டில் ஒரு பயணம். 24. ஜனவரி 2011
2. பாயும் நதி போல். 10. பெப்ரவரி 2011.
3. அழகியல் அலங்காரங்களை நாசப்படுத்துதல். 25. பெப்ரவரி 2011.

**வருகை விரிவுரையாளர்**

**கல்வி ஆண்டு 2010 டிசம்பர் – 2011 டிசம்பர்** **கல்வி ஆண்டு 2010 செப் – 2011 செப்**

பட்டம் – சுற்றாடல் பொருளாதார முதுகலை தொல்பொருளியல் முதுகலை

கற்பித்த பாடநெறி - சுற்றாடல் பொருளாதாரம் 32 மணி உயிர்த் தொல்பொருளியல் 4 மணி

**நூலக முன்னேற்ற அறிக்கை 2011**

1. **புத்தகங்கள்** - 71 புத்தகங்களை வகைப்படுத்தப்பட்டு சேகரிப்புடன் சேர்க்கப்பட்டது.

2. **பருவகால வெளியீடுகள்** – இக்காலப் பகுதியில் 155 பருவகால வெளியீடுகள் கிடைக்கப்பெற்றன.

3. **துண்டு பிரசுரங்கள்** - 20 துண்டு பிரசுரங்கள் சேகரிப்பு சேர்க்கப்பட்டது.

4. **நன்கொடைகள்** – (சுமார்) ரூ. **17900/-** பெறுமதியான புத்தகங்களும் இதழ்களும் கிடைக்கப் பெற்றன.

5. **வெளியீட்டு விற்பனை** – வெளியீடுகளின் விற்பனை மூலம் (சுமார்) ரூ.139377 /- வருமானம் பெறப்பட்டது.

6. **நூலகப் பாவனை** – 2011 ஆம் ஆண்டில் சுமார் 3600 க்கு மேற்பட்ட நூலக வாசகர்கள் நூலகத்தைப் பயன்படுத்தினர்.

**ஜீ.ஐ.எஸ். பிரிவு**

**2011 ஜனவரி தொடக்கம் 2011 டிசம்பர் வரை**

(i) இலங்கையின் 2011 பாறை ஓவியம் மற்றும் செதுக்கல் தளத் திட்டத்துக்காக பின்வரும் வரைபடங்கள் தயார் செய்யப்பட்டன. (முன்னேற்றத்தில்)

(1) இலங்கை வரைபடத்தில் சுற்றுச்சூழல் வலயங்கள் உருவாக்கப்பட்டன.

(2) 'இலங்கையில் அடையாளங் காணப்பட்டுள்ள பாறை ஓவியங்கள் மற்றும் செதுக்கல் தளங்கள்' விநியோகம்

(3) இலங்கையின் பாறை ஓவியங்கள் மற்றும் செதுக்கல் தளங்களின் பரம்பல் கோலம் மற்றும் வரலாற்றுக்கு முந்திய தளங்களைக் காட்டும் வரைபடம்

(4) தற்போதைய திட்டத்தில் சென்று பார்க்கப்பட்ட பாறை ஓவியங்கள் மற்றும் செதுக்கல் தளங்களின் பரம்பல்

(5) டிஜிட்டல் வடிவமைப்பில் வரையப்பட்ட பாறை ஓவியங்கள்

(6) அடோப் இல்லஸ்ட்ரேடர் பயன்படுத்தி வரையப்பட்ட அனைத்து குகை திட்டவரைபடங்கள்..

(ii) நில்கிரிசேய ஆய்வுத் திட்டத்துக்காக பின்வரும் வரைபடங்கள் தயார் செய்யப்பட்டன.

(7) நில்கிரிசேய மடங்களின் தளவரைபடம்

(8) இயற்கையமைப்பு விளக்க அமைப்புக்கள் மற்றும் ஆய்வு பகுதியின் கட்ட வரைபடம்

**(iii) வேறு பணிகள் (முன்னேற்றத்தில்)**

(9) ஆய்வு மற்றும் அகழ்வாராய்ச்சி தளங்களைக் காட்டும் உடவளவை வரைபடம்

(10)சீதாவாக்கை இராசதாணியைக் காட்டும் வரைபட தயாரிப்பு (காநிதி திருமதி. ரோஸ் சொலங்கஹாரச்சி அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க)

(11)துறவி மடத் தொகுதிகளிலுள்ள பட வீடு (பிஎச்டி வரைபடங்கள் – திரு. கம்லத்)

(12)இந்தியாவைக் காட்டும் வரைபடமொன்று

(13)இலங்கையில் துறவி மடங்களின் பரம்பலைக் காட்டும் வரைபடமொன்று (பிஎச்டி வரைபடங்கள் – திரு. கம்லத்)

2. பின்வரும் டிஜிட்டல் தரவுத் தளங்கள் அமைக்கப்பட்டன

(ii) சிறப்பு வரிசைமுறைகளை கண்டறியும் பதிவு மற்றும் மீட்பு தரவுத்தளம், சீகிரியா திட்டம், மத்திய கலாசார நிதியம், 2011.

3. பின்வரும் பதாகைகள் வடிவமைக்கப்பட்டன.

(1). அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தொல்பொருளியல் தளங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களின் பரம்பல்

(2). காலி மாவட்டத்தில் தொல்பொருளியல் தளங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களின் பரம்பல்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமைஅதிபதிதிணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය
எனதுஇல. சீஈ/எப் /பீஜீஐஏஆர்
MyNo / எப்ஏ/2011

ඔබේ අංකය
உமது இல
Your No.

දිනය
திகதி
Date 2012 ஒக்தோபர் 31

பணிப்பாளர்
தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவகம்

**களணி பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 108 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

களணி பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றக் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளதும் ஏனைய விளக்கத் தகல்வல்களதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டமாக்கப்பட்டுள்ள 1985 இன் 02 ஆம் இலக்க தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவக சட்டவிதிப்பின் 20 ஆம் பிரிவு, பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவு மற்றும் 111 ஆம் பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று 2012 செப்தெம்பர் 12 ஆந் திகதி நிறுவகத்தின் பணிப்பாளரிற்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72,பொல்துவவீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. 2887028-34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / மி- nkapy;oaggov@sltnet.lk / E-mail.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்றாரேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து களணி பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கடன்பட்டோர், செலவினம், அன்பளிப்புகள் மற்றும் வருமானங்களை கணக்கு வைக்கும் கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சரக் செயற்திட்டம் முடிவுற்ற பின்னர் செயற்திட்டத்திற்குரிய வங்கிக் கணக்கு தீர்க்கப்பட்டிருந்த போதிலும் அச்செயற்திட்டத்திற்குரிய ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 5,155,572 தொகை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை

**2011 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 108 ஆம் வாசகத்தினடிப்படையிலான அறிக்கை**

| கணக்காய்வு விசாரணை | பதில்கள் |
|---|---|
| 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்<br><br>2.2.1 **கணக்கீட்டுக் கொள்கைகள்**<br><br>கடன்பட்டோர், செலவினம், அன்பளிப்புகள் மற்றும் வருமானங்களை கணக்கு வைக்கும் கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான கணக்கீட்டுக் கொள்கைகள் 2011 ஆம் ஆண்டின் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக வெளிப்படுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்படும் இந்தக் கொள்கைகளை எதிர்வரும் ஆண்டின் கணக்குகளில் வெளிப்படுத்துவதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. |
| 2.2.2 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**<br><br>பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>(அ) சரக் செயற்திட்டம் முடிவுற்ற பின்னர் செயற்திட்டத்திற்குரிய வங்கிக் கணக்கு தீர்க்கப்பட்டிருந்த போதிலும் அச்செயற்திட்டத்திற்குரிய ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 5,155,572 தொகை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை | அ) 2012 ஆம் ஆண்டின் முடிவுக் கணக்குகளின் மூலமாகத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| | |
|---|---|
| (ஆ) மீளாய்வாண்டிற்குரிய செலவினங்கள் 2012 ஆம் ஆண்டிற்கான செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான செலவினம் ரூபா 232,780 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | (ஆ) எழுதுவினைஞர்களுக்கான பற்றாக்குறையைத் தீர்த்து வைக்காமை காரணமாக இந்தத் தாமதக் குறைபாடு ஏற்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாதிருப்பதற்கு இயன்றளவு முயற்சிகளை மேற்கொள்வதுடன் அது குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலவிவரும் ரூபா 687,244 மொத்தமான செலுத்தப்பட வேண்டிய மீதியினை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | (இ) இது தொடர்பில் இந்த மீதியை சரிக்கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவ்வாறு விடுவிக்கப் படாத மீதிகளை முகாமைத்துவச் சபைக்குச் சமர்ப்பித்ததன் பின்னர் நிறுவனத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஈ) ஆராய்ச்சி மற்றும் பிரசுரங்களிற்காக கிடைத்திருந்த நிதிகளிலிருந்து 2011 ஆம் ஆண்டின் இறுதியளவிலும் ஆண்டின் செலவினமாக இனங்காணப்படாதிருந்த செலவினத்திற்காகவும் ரூபா 523,000 தொகை ஏனைய இரண்டு உத்தியோகத்தர்களின் பெயரில் அட்டுறு செலவினமாக ஒதுக்கப்பட்டிருந்தது. | (ஈ) ரூபா. 523இ000.∴- ஆன இந்தத் தொகையானது உள்ளக ஆய்வுகள் மற்றும் கூற்றுக்கள் செலவுகளுக்கான முன்மதிப்பீடுகளில் எஞ்சிய தொகையாகும். ஆய்வுகளுக்கான பணிகளை 2011 ஆம் ஆண்டிற்குள் முடிவுறுத்த முடியாது போனதால் 2012 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்குள் குறித்த ஆய்வுகளின் எஞ்சிய பணிகளை முடிவுறுத்துவதற்கு 2011 ஆம் ஆண்டின் முடிவுக் கணக்குகள் மூலமாக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| (உ) ஐந்தொகையில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் இருப்புச் சீராக்கல் கணக்கு என ரூபா 41,505 மீதியொன்று 2007 ஆம் ஆண்டிலிருந்து தீர்க்கப்படாது முன் கொண்டுவரப்பட்டிருந்தது. | (உ) வெளியீடுகளை அச்சிடும் செலவாகும். அது தொடர்பிலான புத்தகங்கள் காணாமற் போயுள்ளன. கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பித்து அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டில் தீர்த்து வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| **2.3 கணக்காய்விற்கான சான்றின்மை**<br><br>மீளாய்வாண்டில் தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினா செயற்படுத்தப்பட்டிருந்த உள்வாரி ஆராய்ச்சி செயற்திட்டத்தின் செலவினமாக ரூ 3,911,015 செலவிடப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு செயற்திட்டத்திற்குமான தகவல்க உள்ளடங்கிய கோவைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைக சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அச்செலவினங்களின் சரியான தன்மையிை உறுதிப்படுத்த முடியவில்லை. | செலவுகளின் சரியான தன்மையை நிச்சயப்படுத்தும் வகையில் கணக்காய்வில் காட்டப்பட்டவாறு நடவடிக்கைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக எதிர்வரும் காலங்களில் முறையாக சகல தகவல்களையும் உள்ளடக்கிய ஆவணங்களைத் தயார்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2012 திசெம்பர் மாதமாகும் போது அது சரிப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>(அ) நிறுவனத்தின் ஆய்வு நடவடிக்கைகளுக்கே அநேகமாக முற்பணம் தேவைப்படுகின்றது. ஆய்வுகளுடன் தொடர்புபடாத முற்பணங்கள் குறித்த காலப்பகுதிக்குள் கொடுத்துத் |

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் | |
|---|---|---|
| | | தீர்க்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வு விசாரணையில் காட்டப்பட்டுள்ள தாமதங்கள் நிறுவனத்திற்குச் சொந்தமான ஆய்வு நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணங்களாகும். தொல்பொருளியல் ஆய்வுகள் தீவில் தூரப் பிரதேசங்களில் தொடரந்தும் பல மாதங்களாக நடைபெறுவதால் இவ்வாறான தாமதங்க ள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது. எனினும் பெற்றுக் கொண்ட முற்பணங்களை முடிந்தளவு விரைவில் செலுத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன் தாமதங்களைத் தவிர்ப்பதற்கு இயன்றளவு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ப தையும் தெரிவித்துக் கொள்கின்றோம். |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கையேட்டின் 371 ஆவது நிதிப்பிரமாணம் | பணி நிறைவேற்றப்படவுடன் பெற்றுக்கொண்ட முற்பணங்களைத் தீர்த்தல் வேண்டுமாயினும் மீளாய்வாண்டில் 22 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொண்டிருந்த ரூபா 349,750 கலப்பு முற்பணங்கள் மற்றும் 10 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொண்டிருந்த ரூபா 758,980 ஆராய்ச்சி முற்பணங்கள் என்பன 02 தொடக்கம் 05 மாதங்கள் வரை தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தன. | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள் மற்றும் விதிகள் பிரமாணங்களுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) 95 ஆம் இலக்க 1994 யூன் 14 ஆந் திகதிய அரசாங்க முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | சுற்றறிக்கைகளிற்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் மொழித் தேர்ச்சிக்காக பதவியணியினரிற்கு ரூபா 70,242 செலுத்தப்பட்டிருந்தது. | (இ) தற்போது பின்வரும் ஆய்வறிக்கை கல்விசார் ஆளணியினர் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர்.<br>1. பேராசிரியர் ராஜ் சோமதேவ அவர்கள்<br>2. பேராசிரியர் காமினி அதிகாரி அவர்கள்<br>3. கலாநிதி ரோஸ் சோலங்காரச்சி அவர்கள்<br>கலாநிதி அர்ஜுன தந்திலகே அவர்கள்<br>5. கலாநிதி பீ. விதானபதிரண<br>6. அவர்கள்<br>உ.பீ.கம்லத் அவர்கள |

| | | |
|---|---|---|
| (இ) 2011 ஏப்ரல் 07 ஆந் திகதிய 45 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் ஆராய்ச்சிகள் மீதான அறிக்கைகள் 2011 திசெ 31 ஆந் திகதிக்கு முன்னர் நிறுவகத்திற் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் மீளாய்வாண் 09 கல்விசார் பதவியினரிற்காக ஆராய்ச்சிப் படி செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,155,120 இற்கு ஆராய்ச்சி அறிக்கைகள் நிறுவகத்திற்குச் சமர்ப்பிக பட்டிருக்கவில்லை. | |

3. **நிதிசார் மீளாய்வு**

3.1 **நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 36,540,333 பற்றாக் குறையொன்றானதுடன் அதனோடு நேரொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 30,801,301 ஆகும். மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் செலவினங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா. 32,494,457 ஆன மானியம் காரணமாக அப்பற்றாக்குறை ரூபா. 4,045,876 வரை குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினங்களுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா33,639,960 மானியம் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 2,838,659 மிகையாகியிருந்தது. அதன் படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 6,884,535 பின்னடைவிற்கு ஊழியர் சம்பளங்களும் கூலிகளும் அதிகரித்திருந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

| | |
|---|---|
| **4. செயற்பாட்டு மீளாய்வு**<br><br>**4.1 கல்விசார் செயலாற்றல்**<br><br>பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.<br><br>(அ) 2010/2011 ஆம் கல்வியாண்டில் 02 பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பாடநெறிகளும் விஞ்ஞானமானி, தத்துவவியல், தத்துவக் கலாநிதி என்பன 01 பாடநெறி வீதம் நடாத்தப்பட்டிருந்ததுடன் பதிவுசெய்யப்பட்டிருந்த மொத்த மாணவர் எண்ணிக்கை 106 ஆக காணப்பட்டது. முன்னைய கல்வியாண்டில் நடாத்தப்பட்டிருந்த மரபுரிமை ஆய்வுகள் தொடர்பான பட்டப்பின்படிப்பு பாடநெறிக்காக 2010/2011 ஆம் கல்வியாண்டிற்கு மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.<br><br>(ஆ) தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பாடநெறிக்காக 45 மாணவர்கள் 2010/2011 ஆம் கல்வியாண்டில் பதிவுசெய்து கொள்ளப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இப்பாடநெறிக்கான மாணவர் பதிவுசெய்தல் 32.3% ஆல் அதிகரித்திருந்த போதிலும் விஞ்ஞானமானி<br><br>(தொல்பொருளியல்) பாடநெறிக்காக 43 மாணவர்கள் 2010/2011 ஆம் கல்வியாண்டில் பதிவுசெய்து கொள்ளப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8.5% ஆல் குறைவடைந்திருந்தது. | (அ) போதியளவு மாணவர்கள் கற்கைநெறியைப் பின்பற்றுவதற்கு விண்ணப்பிக்காமையால் இந்தக் கற்கைநெறியை நடாத்த முடியாதுள்ளது. இது நம்மால் நிருவகிக்க முடியாத நிலைமையாகும்.<br><br>(ஆ) போதியளவு மாணவர்கள் பதிவு செய்யப்படுகின்றமை தவிர்க்க முடியாததொரு நிலைமையாகும். |

| | |
|---|---|
| (இ) மாணவர் ஒருவரிற்கான கிரயம்<br><br>2009/2010 ஆம் கல்வியாண்டுக்கான மாணவர் ஒருவரிற்கான கிரயம் ரூபா 346,481 ஆனதுடன் 2010/2011 ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் ஒருவரிற்கான கிரயம் ரூபா 432,820 ஆகும். இதன் படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மாணவர் ஒருவரிற்கான கிரயம் 25% ஆல் அதிகரித்திருந்தது. | (இ) 1985 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 திகதிய 03 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு அடிப்படைக் குறிக்கோள்கள் உள்ளன.. அவையாவன பட்டப்பின்படிப்பு கற்பித்தல், தொழிற்பயிற்சி, ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் குறித்த விடயங்கள் தொடர்பிலான அறிவைப் பரப்புதல் போன்றவை ஆகும். அதன்படி ஒரு மாணவனுக்கான செலவினை வைத்து இலங்கை அரசாங்கம் நிறுவனத்திடமிருந்து எதிர்பார்க்கப்படும் பணிகளின் யதார்த்ததினை வெளிப்படுத்த முடியாது. நிறுவனத்தின் நிதி ஒதுக்கீடுகள் மற்றும் நிறுவனத்தின் கடமைகளுக்கடையிலான தொடர்பு அதில் வெளிப்படுத்தப்பட மாட்டாது. ஆதலால் ஒரு மாணவனக்கான செலவு தொடர்பிலான கருத்தினை வெளிப்படுத்தல் தொடர்பில் உடன்பட முடியாது. |
| 4.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை<br><br>நீலகிரி சேய மற்றும் ஹெண்டஓய நிம்னய ஆகிய உத்தேச ஆய்வுகளிற்காக ரூபா 648,600 தொகையான மதிப்பீடு இந்த நிறுவகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் தொல்பொருளியல் திணைக்களத்தினால் இதற்காக ரூபா 500,000 ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஏற்பாட்டினைப் பயன்படுத்தி 2011 ஆகஸ்ட் மாத்தில் ஆய்வு முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான இறுதி அறிக்கை 2012 மே 31 ஆந் திகதி வரை வெளியிடப்பட்டிருக்கவில்லை. | 4.2 நீலகிரி செய மற்றும் ஹெடஓயா பள்ளத்தாக்கு உத்தேச அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகள் 2011 ஜுன் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஜுலை மாதம் 09 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பிலான அறிக்கைகள் 2011 ஒக்டோபர் மாதம் முகாமைத்துவச் சபைக்கும் தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவச் சபை அறிக்கையின் பிரதியொன்று இதனுடன் இணைக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்படுகின்றது. இந்த விடயம் இரண்டு சந்தர்ப்பங்களில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| **4.3 நிதிகளின் குறைந்த பயன்பாடு**<br>------------------------------<br>பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br>(அ) மூலதன மற்றும் மீண்டெழும் செயற்பாடுகளிற்காக பேணிவரப்படுகின்ற இரண்டு நடைமுறைக் கணக்குகளில் மீளாய்வாண்டில் ஆகக்குறைந்த வைப்பு மீதிகள் முறையே ரூபா 9,854,289 மற்றும் ரூபா 6,019,467 என்ற ரீதியில் சராசரி சேமிப்போன்று காணப்பட்டதுடன் அம்மிகைப் பணத்தினை குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்தி வருமானத்தினை ஈட்டிக்கொள்வதன் மீது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு விசாரணையில் வெளிப்படுத்தப்பட்ட நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட மிகைகள் திறைசேரி ஒதுக்கங்கள் என்பதால் அவற்றை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. எனினும் கணக்காய்வு விசாரணை மூலம் காட்டப்பட்ட மிகை நிதியை குறுகிய கால. நடுத்தர கால முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கு அனுமதி கோரி 2012-07-23 ஆம் திகதியன்று கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அதுபோன்றே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் 2012-08-22 ஆம் திகதி மீண்டும் கடிதம் ஒன்று அனுப்பபட்டுள்ளது. அது தொடர்பில் பொதுத் திறைசேரியின் அனுமதியைப் பெற்றவுடன் நிதியை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தலிற்காக கிடைத்திருந்த ஏற்பாடுகள் பல வருடங்களாக குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்விதம் குறைவாகப் பயன்படத்தப்பட்டிருந்த ஏற்பாடுகளின் பெறுமதி ரூபா 7,381,803 ஆகும். | காட்டப்பட்டுள்ள ரூபா.7,381,800.'.- ஆன முழுத்தொகைக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள ஒப்பந்த வேலை தற்போது முடிவடைந்து வருவதுடன் கட்டணம் செலுத்தி முடிவுறுத்தப்படாததால் நிதி மீதமாகவிருப்பதாகத் தென்படுகின்றது. எனினும் இந்த மீதி பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த தொகைக்கான பட்டியல்களில் அநேகமானவை தற்போது செலுத்தித் தீர்க்கப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| 4.4 நூலக நிர்வாகம்<br><br>மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 62,455 பெறுமதி கொண்ட 37 நூலகப் புத்தகங்கள் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | 2012-10-23 ஆம் திகதி முதல் 2012-12-23 ஆம் திகதிவரை புத்தகங்களை மீண்டும் ஒப்படைப்பதற்காக கால அவகாசம் வழங்கப்பட்டது. இந்த இரண்டு மாத காலப்பகுதியினுள் ஒப்படைக்காவிட்டால் இரண்டு வாரகாலப்பகுதிக்குள் அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதுடன் அதுவரை ஒப்படைக்கத் தவறிய நபர்களின் பெயர்களைக் கணக்காய்வுக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் முகாமைத்துவச் சபைக்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்<br><br>கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களின் பால் விசேட கவனம் கோரப்படுகிறது.<br><br>(அ) கணக்கீடு<br>(ஆ) பல்வின முற்பணங்கள்<br>(இ) நூலக நிர்வாகம் | (அ) கணக்கீடு<br>(ஆ) நானாவித முற்பணங்கள்<br>(இ) வாசிகசாலை நிருவாகம்<br><br>மேற்படி விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |